# போராட்டம்

இதழ் - 20 2015 வைகாசி — மக்கள் போராட்ட இயக்கத்தின் வெளியீடு — 20 ரூபா














# மாற்றமில்லை திரும்புவோம் இடதுபக்கம்!




**இரணில் – மைத்திரி அரசு, விரைவில் நடத்துவதாகக் கூறும் தேர்தலின் பக்கம் பெரும்பாலான மக்களின் கவனம் தற்போது திரும்பியிருக்கிறது. இரணில் – மைத்திரி அரசு பதவிக்கு வந்த போது கூறிய ஜனநாயகம், நல்லாட்சி, ஊழல் முறைகேடுகளை ஒழித்தல் போன்ற கோசங்கள் வெறும் வார்த்தைகளாகிவிட்டன. ஜனாதிபதித் தேர்தலின்போது அள்ளி வீசிய வாக்குறுதிகள் இந்த வெற்று வார்த்தைகளுக்குள் நீர்த்துப் போய்விட்டன. ஜனாதிபதித் தேர்தலின்போதும் எமது உண்மையான பொருளாதாரப் பிரச்சினைகள் மறைக்கப்பட்டு உண்மையான ஜனநாயகம் சம்பந்தமான பிரச்சினை கைவிடப்பட்டு வேறு பொய்யான பிரச்சினைகளுக்குள் நாங்கள் சிறைபடுத்தப்பட்டோம். இப்போது, இவர்கள் நடத்துவதாகக் கூறும் பாராளுமன்ற தேர்தலிலும் அதுதான் நடக்கப்போகிறது. எமது வாழ்க்கையின் உண்மையான பிரச்சினைகளுக்குப் பதிலாக எமக்கு சம்பந்தமில்லாத ஏராளமான பொய் பிரச்சினைகள் ஏற்கனவே மெதுவாக மேடைக்கு வந்துவிட்டன. இவ்வாறு முன்னிலை சோசலிசக் கட்சி, சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள அரசியல் அறிக்கையில் கூறுகிறது.**

**தொடர்ந்து அதில் கூறப்பட்டுள்ளதாவது:**

தொடர்ச்சி : பக்கம் 02 இல்

## பாலியல் குற்றவாளிகளை விடுதலை செய்யக் கோரும் விக்கி ...பின்னணி என்ன??

இந்தியாவில் உள்ள மாநிலங்ளுடன் ஒப்பிடுகையில் எந்த வித அதிகாரமும் இல்லாதவெரு பதவியை வைத்துள்ள ஒருவரை, ஏதோ மிக முக்கிய மாநிலத்தின் அல்லது நாட்டின் தலைவர் போலச் சித்தரித்து, அந்நபர் கொலைகார சாமியாருக்காக வக்காளத்து வாங்குவது போலப் பிரம்மையை உருவாக்கும் விதத்தில், இந்தியாவின் அதிகாரா வர்க்கங்களால் வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன், இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதம் ஊடகங்களுக்கு கசிய விடப்பட்டுள்ளது. அதுவும், இந்தியாவின் அதி உச்ச ஊடகங்களில் விக்னேஸ்வரனின் கடிதம் கசிய விடப்பட்டுள்ளது. இக் கசியவிடல் பல வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தியுள்ளது. குங்குமம் சந்தனம் மணக்க வலம் வரும் விக்னேஸ்வரன், மற்றொரு இந்துத்துவவாதியான மோடிக்கு எழுதிய கடிதம் உருவாக்கியுள்ள அரசியல் அலையின் பின்னணி என்ன ? இதை ஆராய முன் நாம் அக் கடிதத்தில் உள்ளடக்கம் என்னவென்பதைப் பார்ப்போம் . விக்னேஸ்வரன் மோடிக்கு எழுதிய கடிதத்தில், இந்தியாவின் மிக முக்கிய இந்துமத சாமியாரான பிரேமானந்தா ஆசிரமத்தில் இடம்பெற்ற பாலியல் வன்புணர்வு மற்றும் கொலை வழக்கில்,



**தொடர்ச்சி : பக்கம் 02 இல்**

## மகிந்த குழுமத்தின் மீதான ஊழல் விசாரனைகளின் பின்னணி என்ன ?




மகிந்தா குடும்பத்திற்கும், அதை அண்டிப் பிழைத்தவர்களுக்கும் எதிரான ஊழல் விசாரனைகள், ஊழலை ஒழிப்பதற்கானது என்று கூறுகின்றது ரணில் –மைத்ரி அரசு. இதை தனது 100 நாள் திட்டமாகவும், நல்லாட்சிக்கான ஒன்றாகவும் சித்தரிக்கிறது . மைந்தவோ இதைத் தனது குடும்பம் மீதான பழிவாங்கல் என அங்கலாகிக்கிறார்.

மஹிந்த சார்ந்தவர்கள் ஊழல் செய்தார்கள் என்பதும் , அதன் மீது விசாரணை செய்யப் படல்வேண்டுமென்பதும் சரியானவை என்பது ஒரு புறமிருக்க, உண்மையில் ரணில் –மைத்ரி அரசின், மஹிந்த கும்பலின் ஊழல்கள் மீதான விசாரணை பற்றி கூறும் மேற்படி கருத்துக்கள் அடிப்படையில் அரசியல் மோசடியானவை. ஊழலுக்கு எதிரான விசாரனைகள் என்பது, மகிந்தவும் அவரைச் சுற்றிய கும்பலுக்கு மட்டுப்படுத்தபட்டதானது என்ற வகையில், இதுவொரு அரசியல் உள்நோக்கம் சதியாகும்.

மகிந்தாவுக்கு பதில் மைத்திரியின் முகமாற்றத்தைக் கொண்டு வர முன்வைத்த 100 நாள் திட்டமும், நல்லாட்சி எவ்வளவுக்கு எவ்வளவு மோசடியானதோ, அந்தளவுக்கு ஊழலுக்கு எதிரான கைதுகள் சதித்தனமானது. மகிந்தவை தோற்கடித்தததன் மூலம் பெற்ற அதிகாரங்களைப் பெற்றவர்களும், அந்த அதிகாரங்கள் மூலம் பொருளாதார நலன்களை அடைந்துவருபவர்களும், தொடர்ந்து தங்களை தக்க வைக்கவே மஹிந்த கும்பல் மீதான ஊழல் விசாரனைகள் முன்னெடுக்கப்படுகின்றது.

**தொடர்ச்சி : பக்கம் 02 இல்**

**முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?**

முதலாம் பக்க தொடர்சி

## மாற்றமில்லை திரும்புவோம் இடதுபக்கம்!

வாழ்வதற்காக எமக்கு கிடைக்கும் சொச்ச சம்பளம் போதவே போதாது. ஆதலால், மேலதிக நேரம் வேலை செய்ய, வேறு சில தொழில்களை செய்ய, எதையாவது விற்க அல்லது தொடர்ந்தும் எம்மையே விற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஓய்வெடுக்க, குடும்ப உறுப்பினர்களோடு நண்பர்களோடு பொழுதுபோக்க, சாதாரண மனித உறவுகளைப் பெற எமது வாழ்வில் நேரம் போதவில்லை. வாழ்க்கையை அனுபவிக்க ஒரு வினாடிகூட எஞ்சியிருப்பதில்லை. பாடுபடும் வாழ்வு மாத்திரம் எஞ்சியுள்ளது. கடந்த தேர்தலிலும் எமது சம்பளப் பிரச்சினை தேர்தல் மேடைகள் தோறும் ஒலித்தது. அரச ஊழியர்களுக்கு மட்டும் கடந்த வரவு செலவு அறிக்கையில் கொஞ்சம் அதிகரிக்கப்பட்டது. அதுவும் அடிப்படை சம்பளத்துடனல்லஇ கொடுப்பனவாக. தனியார் துறை ஊழியர்களுக்குஇ தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரு செப்புக்காசு கூட அதிகரிக்கப்படவில்லை. அன்றாடம் கூலி வேலை செய்து வாழ்பவர்களுக்குஇ சுயமாக ஏதாவதொரு சிறு வியாபாரம் செய்பவர்களுக்கு, ஆட்டோ ஓட்டுபவர்களுக்குஇ சாப்பாட்டுக்கடைகளில் காலையிலிருந்து இரவுவரை உழைக்கும் அநேகருக்கு எள்ளளவு கூட அதிகரிக்கப்படவில்லை. அதிகரிக்க வழியுமில்லை. பொதுத் தேர்தலை இலக்கு வைத்து கடந்த வரவு செலவு அறிக்கையில் சில பொருட்களின் விலை குறைக்கப்பட்டது. அதுவும் ஒரு தேர்தல் குண்டுதான். அப்படியில்லாமல் உழைக்கும் மக்களாகிய எங்களை இந்த படுகுழியில் தள்ளிய பொருளாதாரக் கொள்கையை மாற்றுவதற்கு கொண்டு வந்த வரவு செலவு அறிக்கையல்ல. அந்த வரவு செலவு அறிக்கையில் எமது பிள்ளைகளின் கல்விக்குஇ மக்களின் சுகாதாரத்திற்கு, போக்குவரத்திற்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை. அந்த அத்தியாவசிய சேவைகள் தனியாருக்கு விற்கப்படுவது தொடர்ந்தும் அதிகரிக்குமேயல்லாது குறையப்போவதில்லை. அந்த சேவைகளை பெற்றுக் கொள்ள நாங்கள் மேலும் மேலும் செலவழிக்கும் நிலையே உள்ளது. ஒருகையால் நிவாரணம் தருவதாகக் கூறி இருகைகளாலும் திரும்பப் பெற்றுக் கொள்வது இப்படித்தான். விவசாயிகள், மீனவர்கள், மாணவர்கள், ஒடுக்கப்பட்ட மக்கள், பெண்கள் ஆகியவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு இல்லை. குறைந்தபட்சம் அது குறித்துப் பேசப்படவே இல்லை. பொதுத் தேர்தலின்போதும் மீண்டுமொருமுறை அதிகாரத்தை பெற்றுக் கொள்ள இரு பிரதான கட்சிகளும் போட்டியில் இறங்கியுள்ளன. மக்களுக்கு ஜனநாயகத்தை பெற்றுக் கொடுத்தல், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழித்தல் போன்ற கோசங்கள் புஸ்வாணமாகப் போய்விட்டன. இப்போது ஜனநாயகத்தைப் பற்றி கூறும் அரசியலமைப்பு திருத்தங்கள் அனைத்தும் தீர்மானிக்கப்படுவது இந்த அதிகாரப் போட்டிக்கு ஏற்றபடிதான். ஜனாதிபதித் தேர்தலில் தோற்றவர்கள் இப்போது, மீண்டும் இனவாதத்தை சுமந்துக் கொண்டு அதிகாரத்திற்கு வர முயல்கிறார்கள். இன்னும் சிலர் சிகப்புச் சட்டையை போட்டுக் கொண்டு இந்த பெரிய கட்சிகள் செய்யும் பொய்யை வெளிப்படுத்தாமல் அவர்களது செப்படி வித்தைக்கு வெள்ளையடிக்கிறார்கள். இந்த நிலைமையில்தான் இம்முறை சர்வதேச தொழிலாளர் தினமும் வருகிறது (மே தினம்). வழமை போன்று எல்லோரும் அன்றைய தினம் உழைக்கும் மனிதர்களின், ஒடுக்கப்பட்டவர்களின் பிரச்சினைகளை மே தின மேடைகளில் மெல்லுவதற்கு எடுப்பார்கள். அந்த கேள்விகளுக்கான பதில் அரசியல் கட்சிகளிடம் இருப்பதாகக் கூறி தம்மை ஆட்சியில் ஏற்ற வாக்குக் கேட்பார்கள். தத்தமது அதிகாரத் திட்டங்களில் தங்கியுள்ளதாக இம்முறையும் எல்லோரும் சொல்வார்கள். வருடம் பூராவும் நாறிக்கிடக்கும் இந்த முறைமைக்கு சொந்தக்காரர்களான அனைவரும், இந்த முறைமையை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்காக, இடதுசாரிகளெனத் தம்மைக் கூறிக்கொண்டு வெள்ளயடிப்பவர்கள் தான். மே தின மேடைகளில் மாத்திரம் உழைக்கும் மக்கள் குறித்து முதலைக் கண்ணீர் வடிப்பார்கள். அதன் பிறகு, அடுத்த நாளிலிருந்து எமது வாழ்வை சீரழிக்கும் இந்த முறைமையை பாதுகாக்க நடவடிக்கை எடுப்பார்கள். சர்வதேச தொழிலாளர் தினத்தில் மாத்திரம் வரையறுக்கப்படும் தொழிலாளர்களின் உரிமைகள் சம்பந்தமான பேச்சு எங்களுக்கு தேவையில்லை. அப்பேச்சுக்களைஇ மண்ணில் உயிரோட்டமான போராட்டமாக மாற்றுவதற்கு நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி செயற்படாதவரை இந்த ஏமாற்று வித்தை என்றென்றும் தொடர்கதைதான். எனவே, எமது பிரச்சினைகள் குறித்துப் பேச, போராட, வாழ்வையும் உரிமைகளையும் பெற்றுக் கொள்வதை மே தினத்திற்கு மாத்திரம் வரையறுக்க முடியாதென்பதை புரிந்து கொள்ளுமாறும்இ பொய் எதிர்ப்பார்ப்புகளுக்கும்இ கனவுகளுக்கும், வாக்குறுதிகளுக்கும் ஏமாராமல் உண்மையான வெற்றிகளை பெறுவதற்காக, பேசுவதற்கு, போராடுவதற்கு முன்வருமாறும், அதற்காக எங்களோடு இணையுமாறும் நாம் உங்களிடம் வேண்டுகிறோம்.

மகிழ்ச்சியில்லை சுதந்திரமில்லை
சம்பளமில்லை வாழ்க்கையில்லை
மாற்றமில்லை– திரும்புவோம் இடதுபக்கம்

தொழிலாளர் போராட்ட மத்திய நிலையம் – முன்னிலை சோஷலிஸக் கட்சி


முதலாம் பக்க தொடர்சி

## பாலியல் குற்றவாளிகளை விடுதலை செய்யக் கோரும் விக்கி ...பின்னணி என்ன?



பிரேமானந்தாவுடன் தண்டனை விதிக்கப்பட்ட கமலானந்தா, பாலேந்திரன், சதீஸ்குமார் ஆகிய மூவரையுமே விடுதலை செய்யுமாறு குறிப்பிட்டுள்ளார். மேலும், கமலானந்தாவும், ஏனைய இருவரும், இந்த வழக்கில் போலியாக சிக்க வைக்கப்பட்டுள்ளதாகவும், பிரேமானந்தா ஆசிரமத்தையும், அதன் சொத்துக்களையும் பராமரிக்க வேண்டியுள்ளதால், அதனைப் பொறுப்பெடுக்க வேறு யாரும் இல்லாத நிலையில், அப்பாவிகளான இவர்களை விடுதலை செய்யுமாறும், இந்தியப் பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். "வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ள விடயம் இந்திய அதிகாரிகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது." என இந்தய பத்திரிகையான ரைம்ஸ் ஒவ் இந்தியா செய்தி வெளியிட்டுள்ளது. கொலை மற்றும் பாலியல் வழக்குகளில் சிக்கிய பிரேமானந்தா, குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டு, அவருக்கும் ஏனைய மூவருக்கும் 1997ம் ஆண்டு புதுக்காட்டை நீதிமன்றத்தினால் இரட்டை ஆயுள் தண்டனையும், 66.4 இலட்சம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது. திருச்சியை அடுத்த பாத்திமா நகரில் உள்ள ஆசிரமத்தில் 13 பெண்களை பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தியது, மற்றும் ரவி என்பவரைக் கொலை செய்து ஆசிரமத்துக்குள் புதைத்தது உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் இவர்கள் மீது சுமத்தப்பட்டன. எனினும், 2011ம் ஆண்டு பிரேமானந்தா பல்வேறு நோய்களினால் பாதிக்கப்பட்டு, கூடலூர் சிறையில் இறந்து விட்டார். பிரேமானந்தா ஆசிரமத்தில் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டதாக கூறப்படும், 13 பெண்களுமே இலங்கைத் தமிழர்களாவர். இப்போ, மேற்படி கடிதம் கசிய விடப்பட்டதன் நோக்கம் வாசகர்களுக்கு இலகுவாகப் புரிந்திருக்கும். விக்னேஸ்வரன் இந்துத்துவத்தை முன்னிறுத்தும் , யாழ் . மேலாதிக்க சக்திகளில் பிரதிநிதி என்பது யாவரும் அறிந்த விடையம். அவர் இந்தியாவுக்கு கடந்த வருடம் போன போது மேற்படி கொலைக் குற்றவாளியான போலிச்சாமியார் பிரேமானந்தாவின் ஆசிரமத்துக்கு விஜயம் மேற்கொண்டார். அப்போதும் விக்னேஸ்வரன் பிரேமானந்தா தெய்வீக சக்தி உள்ளரென்றும், அவர் இறந்து விட்டாலும் அவர் நிரபராதியென்றும், அவருடன் கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்பட வேண்டுமென்று கருத்துத் தெரிவித்தார். இதே உள்ளடக்கத்துடன் விக்கினேஸ்வரன் எழுதிய கடிதம், அப்போதில்லாத சர்ச்சையை இப்போ ஒரு வருடங்களின் பின்– உருவாக்கக் முனைவதன் காரணம் என்ன ? அதுதான் கூட்டமைப்புக்குள் நடக்கும் உள்வீட்டு அடிபாடுகளாகும். இலங்கையின் ஒட்டுமொத்த அதிகாரங்களையும் கைப்பற்றுவதர்கான போட்டி தெற்கில் மும்முரமாக நடந்து கொண்டிருக்கிறது.

அதேவேளை, வடக்கில் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க போராடுவதாகக் கூறும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் அதிகாரப் போட்டிகள் நடைபெற்று வருகிறது. இப்போட்டி, தமிழ்பேசும் மக்களில் விடுதலைக்காகவே அல்லது அவர்களின் நலனைக் காப்பதற்காகவே அல்ல . மாறாக, சுயநல அடிப்படையில்– தமிழ் அரசியல்வாதிகளுக்குள், அவர்கள் அதிகார மையங்களை உருவாக்கி வருவதனால் ஏற்படும் போட்டியாகும். இப்போட்டியில் வெல்பவர்கள் வடமாகாண சபையின் அதிகாரங்களைத் தமது ஆட்சிக்குள் உட்படுத்தி, அவற்றை தமது பொருளாதார மற்றும் அரசியல் லாபத்துக்காகவும் உபயோகிக்க முயற்சிப்பார்கள் என்பது நாம் சொல்லித் தெரிய வேண்டிய விடயமல்ல. இப்போட்டியில் பங்கு கொள்ளும் முக்கிய போட்டியாளர்களுக்கு நந்தி போல இடையில் கிடக்கும் விக்னேஸ்வரனை அகற்ற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, இந்தியாவின் கைப் பிள்ளைகளான சுரேஷ் பிரேமச்சந்திரன், மாவை சேனாதிராசா போன்றவர்களுக்கு விக்னேஸ்வரனின் அரசியல் இருப்பும், அவரின் முதலமைச்சர் பதவியும் மிக இடைஞ்சலாக உள்ளது. இந்தப் பின்னணியில் தான் , விக்னேஸ்வரனை பதவிக்குக் கொண்டு வர ஆலோசனை கூறிய இந்தியாவே இப்போ அவரை, அரசியல் மற்றும் அதிகார நீக்கம் செய்ய முயற்சிகளை மேற் கொள்ளுபவர்களுக்கு உதவ முன் வந்துள்ளது.



முதலாம் பக்க தொடர்சி

## மகிந்த குழுமத்தின் மீதான ஊழல் விசாரனைகளின் பின்னணி என்ன ?

ரணில் –மைத்ரி அரசின் நேர்மையற்ற அரசியல் உள்நோக்கை தனக்கு சாதகமாகப் பயண்படுத்திக் கொள்ளும் மைகிந்தவும் அவரின் அடிவருடிகளும், ஊழல் விசாரனையை தமக்கு எதிரான தனிப்பட்ட பழிவாங்கலாக மக்கள் மத்தியில் பிரசாரத்தை முன்னெடுப்பதன் மூலம் ரணில் –மைத்ரி அரசின் அரசியல் நடவடிக்கை முடக்கிவிடமுயல்கின்றனர். இதன் மூலம் தங்களின் தனிபட்ட ஊழல் மற்றும் மோசடிகளை மூடிமறைக்கின்ற அரசியல் பித்தலாட்டத்தை முன்தள்ளி, மீளவும் மகிந்தவை முன்னிறுத்தி அதிகாரத்தை பிடிக்க முனைகின்றனர்.

இன்றுள்ள ரணில் –மைத்ரி அரசு முன்னாள் ஊழல் பேர்வழிகளையும் அரச அதிகாரத்தில் அமர்த்தியுள்ளது. அத்துடன் இன்றைய அரசை இயந்திரத்தை இயங்குகின்ற– நிர்வாகம் செய்கின்ற அதிகார வர்க்கமும் கூட மகிந்த அரசின் ஊழலுக்கு துணையாக இருந்ததுடன், நாட்டின் வளங்களைக் கொள்ளையிட்டவர்கள் தான். அதே போன்று தான் இன்று சட்டம், மற்றும் நீதியை நிர்வாகம் செய்தோரும் மஹிந்த காலத்தில் ஊழல் செய்தவர்கள் . இந்த வகையில், உண்மையில் ஊழலை இந்த அமைப்பு முறைக்குள் ஒழித்துக்கட்டுவது தான் அரசின் நல்லாட்சிக் கொள்கை என்றால், செய்து இருக்க வேண்டியது முதல் வேலை, ரணில் –மைத்ரி அரசுடன் இணைந்து கொண்ட அனைவர் மீதுமான விசாரனையை முதலில் தொடங்கி இருக்க வேண்டும்.

### இந்த நிலையில்

1.இன்றைய அரசும், அரசுடன் இருக்கின்ற தரப்பும் தங்கள் அதிகாரம் மற்றும் இந்த அதிகாரம் சார்ந்த மூலதன நலன்களை பாதுகாக்க, மகிந்தாவை அரசியல் ரீதியாக செயலற்றவராக மாற்ற அவரின் தலைமையிலான ஊழலை ஆயுதமாக பயன்படுத்துகின்றனர்.

2.மகிந்த அரசை தூக்கியெறிய உதவிய மேற்கு மற்றும் இந்தியாவின் இன்றைய நலன்கள் மீளவும் அச்சுறுத்துப்படுக்கின்ற புதிய அரசியல் சூழ்நிலை உருவாகிவரும் நிலையில், அதை தடுப்பதாற்காக மகிந்தாகும்பல் அவர்களால் இலக்கு வைத்து சுற்றி வளைக்கப்படுகின்றார்.

இந்த வகையில் மேலே கூறியது போல, இந்த ஊழல் விசாரனைகள் என்பது ஊழலுக்கு எதிரானதல்ல. மாறாக மகிந்த மீண்டும் அதிகாரத்துக்கு வருவதைத் தடுக்க, அவரையும், அவரைச் சுற்றியவர்கள் மேலான அரசியல் சதியே ஊழல் விசாரனையாகும்.

ஊழலை அடிப்படையாகக் கொண்ட இந்த அமைப்பையும், அதை பாதுகாக்கும் அதிகார வர்க்கத்தைக் கொண்டும் ஊழலை ஒழிக்க முடியாது. மக்களை ஊழலுக்கு எதிராக வாக்களிக்க வைப்பதோ, நல்லாட்சி பற்றி தேர்தல் வாக்குறுதிகள் மூலமோ, ஊழலை ஒழிக்க முடியாது. மாறாக மக்களை ஊழலுக்கு எதிராக அணிதிரட்டுவதன் மூலமே, ஊழலை ஒழிக்கமுடியும். இது மட்டும் தான், ஊழலுக்கு எதிரான அரசியல் எதார்த்தமாகும். மற்றவை மக்களை எமாற்றுகின்ற மோசடியாகும்.

முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?

# தமிழ் மக்களின் உரிமைப் போராட்டமும் கோரிக்கைகளும்



இலங்கை சுதந்திரம் அடையு முன்பே நாம் கேட்டது (பாராளுமன்றத்தில்) சம அந்தஸ்து. சுதந்திரம் கிடைத்ததும் நாம் கேட்டது கூட்டாட்சி. பின்னர் நாம் மாவட்ட ஆட்சி கேட்டோம். இவைகள் கிடைக்காத போது தனி அரசு அமைப்பதற்காகப் போராடினோம். இன்று நாம் மாகாண ஆட்சி வேண்டும் என வரிந்து கட்டிக்கொண்டு நாட்டிலும் நாட்டுக்கு வெளியிலும் நமக்குள்ளேயே கட்டிப் புரண்டு அடிபட்டுக் கொண்டு நிற்கிறோம். அத்துடன் ஆளுக்கு ஆள் தலைமை வகித்தபடி இந்தியாவிடமும் சர்வதேச சமூகத்திடமும் மண்டியிடுவதில் நான் முந்தி நீ முந்தியென முண்டியடித்தபடி ஓடிக்கொண்டிருக்கிறோம். மக்கள் என்னும் பெயரால் எம்மை மந்தைகளாகக் கருதிக் கொண்டு முன்னெடுக்கப்படும் இந்த அரசியல் அநியாயத்தை இனிமேலும் நாம் பார்த்துக்கொண்டு இருக்கமுடியாது. இந்தப் பிரச்சனையை மக்களாகிய நாம் கையில் எடுக்கவேண்டிய தருணம் வந்துவிட்டது. அதற்கான அவசியத்தையும் அதன் தாற்பரியத்தையும் பற்றி நாம் ஆராய்வோம்.

சுயநிர்ணய உரிமை என்பது ஒரு மனிதனுடைய உரிமையில் இருந்தே பிறக்கிறது. அந்த மனிதன் கூட்டமாக சேர்ந்து வாழும்போது அந்த தனிமனித உரிமை அந்த மக்கள் கூட்டத்தின் சுயநிர்ணய உரிமையாக பரிணாமம் பெறுகிறது. எனவே சுயநிர்ணய உரிமை கோரும் ஒரு மக்கள் கூட்டத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் சுதந்திரம் கிடைக்கிறது. தான் உயிர் வாழ்வதற்கும் அதற்குத் தேவையான உடைமைகளைத் தேடி உழைப்பதற்கும் அவற்றைப் பாதுகாப்பதற்கும் அவனுக்கு பூரண சுதந்திரம் உண்டு. இது மறுக்கப்படும் போது அந்த மனிதன் தனது உயிர் வாழ்வதற்கான சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டிப் போராடவேண்டிய அவசியத்திற்கு, நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்கப்படுகிறான். அவனுடன் அவனைப் போன்ற ஏனைய மனிதர்களும் ஒன்றுசேரும் போது அது ஒரு மாபெரும் மக்கள் சக்தியாக மாறி அவர்கள் தங்கள் சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்வார்கள். இது ஒரு விஞ்ஞான இயங்கியல் நியதி. வரலாறு காட்டி நிற்கும் உண்மை.

இந்த உண்மையை இலங்கைக் குடிமக்கள் அதாவது தமிழ்–சிங்கள–முஸ்லீம்––மலையக மக்கள் உணர்ந்து கொள்ளாதபடி, புரிந்துகொள்ள முடியாதபடி எமது நாட்டின் அரசியல் விற்பன்னர்கள், ஞானிகள், தலைவர்கள் தங்கள் காரியங்களை மிகவும் கச்சிதமாக மேற்கொண்டு வருகின்றனர். இலங்கை அரசின் கீழ் எமக்கு மறுக்கப்படும் உரிமைகள் சாதாரண சிங்கள–முஸ்லீம்–மலையக மக்களுக்கும் மறுக்கப்படுகிறது. அவர்களும் தங்களுடைய உயிர் வாழ்தலுக்காகப் போராடிக் கொண்டுதான் இருக்கிறார்கள். எந்தக் காலத்திலும் சிங்கள மக்கள் மற்றப் பிரிவு மக்களின் உரிமையை மறுத்தது கிடையாது. அப்படி சிங்கள மக்கள் மறுத்திருந்தால் இன்று தென்னிலங்கையில் அவர்களைத் தவிர வேறு எவரும் வாழ்ந்து கொண்டிருக்க முடியாது. இந்த யதார்த்தத்தை, கள நிலைமையை, பச்சை உண்மையை நாம் புரிந்து கொண்டு செயற்படுவதன் மூலமே இலங்கையின் இனப் பிரச்சனை என்ற நீண்ட கால அரசியல் கையாடலை, ஏமாற்றுத்தனத்தை, சூழ்ச்சியை முறியடித்து நாம் நமது மண்ணில் சுதந்திரமாக வாழமுடியும் .

கடந்த கால எமது உரிமைக்கான போராட்டம் மக்களுக்கான உரிமைகளை வென்றெடுக்கின்ற போராட்டமாக இருந்திருந்தால் எமது எதிரியாக சிங்களப் பேரினவாத அரசும் அதன் அங்கங்களும் அவற்றுக்கு காலம் காலமாக முண்டுகொடுத்துக் காப்பாற்றும் வெளி சக்திகளுமே இனங்காணப்பட்டிருக்க வேண்டும். ஆனால் நாம் எமக்குப் பிடிக்காதவர்கள், எம்முடன் ஒத்துவராதவர்கள், நடுநிலையாளர்கள் அனைவரையுமே எதிரிகளாக்கினோம். நாம் நண்பர்களைத் தேடாமல் புதிய எதிரிகளை உருவாக்கினோம். எமக்கு ஒரு நாடு எனக் கூறி எமக்குள்ளேயே எமது உரிமைகளை மறுதலித்தோம். மக்களை ஒன்றுபடுத்துவதற்றுப் பதில் நாளும் பொழுதும் மக்களைப் பிளவுபடுத்தினோம். நடந்து முடிந்த இன விடுதலை யுத்தம் (மக்கள் விடுதலைப் போராட்டம் அல்ல) இலங்கையின் அனைத்து குடிமக்களையும் பல் வேறு வடிவங்களில், வித்தியாசமான விகிதாசாரத்தில், வேறுபட்ட பரிமாணங்களில் பாதித்துள்ளது. இந்தப் பாதிப்புக்களில் இருந்து நாம் விடுபட்டு சாதாரண வாழ்வுக்குத் திரும்புவதற்கான வழிவகைகளை அடைவதற்கு எமது பட்டறிவு பயன்படுத்தப்படல் வேண்டும்.

**"நீ உன்னையும் உனது எதிரியையும் அறிந்து கொண்டிருப்பாயேயானால் நூறு யுத்தங்களானாலும் தோற்கமாட்டாய்.நீ உன்னை அறியாமல் உனது எதிரியை மட்டும் அறிந்திருந்தால் ஒரு யுத்தத்தில் தோற்று இன்னொரு யுத்தத்தில் வெல்வாய்.நீ உன்னையும் அறியாது உனது எதிரியையும் அறியாதபோது ஒவ்வொரு யுத்தத்திலும் தோற்கடிக்கப்படுவாய்."**

**- போர் கலை பற்றிய நூலில் சுன் சூ**

## குடாநாட்டு மக்களுக்குத் தண்ணி காட்டும் அரசியல் வித்தகர்கள்

ஜனநாயக மீட்புக்கு முன் தொடங்கிய இரணைமடுக்குளம நீர் பற்றிய கரிசன அலைகள் ஜனநாயக மீட்புக்குப் பின்னர் இன்று யாழ்குடாநாட்டுக்குள் சுன்னாகம் வரை வந்து மோதியபடி நிற்கிறது. வன்னிப் பேரழிவினால் பாதிக்கப்பட்டோர் பசி தீர்க்க வழியின்றி படுக்க நிழல் இல்லாமல்––வாழும் வழி அறியாமல் பரிதவிக்கையில் மக்கள்தலைவர்கள் தங்கள் பாராளுமன்றக் கதிரைகளுக்கான காய் நகர்த்தல்களில் தீவிரமாக இறங்கியுள்ளார்கள். யார் யாரைப் நிறுத்தினால், எந்தெந்த பட்டிக்குள் மக்களை அடைத்தால், எங்கெங்கு உறவுகளை வைத்துக் கொண்டால், எப்படியெப்படி அறிக்கைகளை வெளியிட்டால் தங்களுக்கு பதவி –பாதுகாப்பு –பவிசுயாவும் கிடைக்கும் என்கிற ரீதியில் கட்சி இயந்திரங்கள் இயங்குகின்றன. ஆளுக்கு ஆள் ஒரு கோஷம், நாளுக்கு நாள் ஒரு நியாயம், ஊருக்கு ஊர் ஒரு விளக்கம். நாட்டில் தேர்தல் களைகட்டத் தொடங்கிவிட்டது. "பொறுப்போம்" எனவும் "பொறுத்தது போதும் பொங்கி எழுவோம்" எனவும் வேப்பிலை அடித்து உருவேற்றத் தொடங்கிவிட்டனர்.



பேரழிவுக்கான பாதைக்கு வித்திட்டு நீர் ஊற்றி வளர்த்தவர்கள் இன்று அந்தப் பேரழிவுக்குப் பொறுப்பாக நின்றவர்கள் முன்னால் நீதி கேட்டுநிற்கிறார்கள். கிடைக்குமா நீதி? அநியாயத்திற்கும் அக்கிரமத்திற்கும் துணை நின்ற பிரதிநிதிகளைக் கொண்டு அமைக்கப்படும் ஒரு அரசாங்கத்தை கட்டமைப்புச் செய்யும் ஒரு அரசியல் யாப்பின் கீழ் பாதிக்கப்பட்ட எந்த மக்களுக்கும் ஒருபோதும் நீதி கிடைக்காது. மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமானால், அவர்களது வாழ்வாதாரங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டுமானால், அவர்களுடைய சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டுமானால் அரசுக் கட்டமைப்பு மாற்றப்பட வேண்டும். அந்தக் கட்டமைப்பை மாற்றுவதற்குத் தகுதியானவர்களை மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்.

இவர்களால் இந்நாட்டில் பிறந்து வாழும் அனைத்து மக்களுக்கும் சமத்துவமான உரிமைகள் வழங்கும் ஒருபுதிய அரசியல் யாப்பு வரையப்படல் வேண்டும். இன்று நாம் ஆத்திரப்படாமல் ஆற அமரச் சிந்தித்து செயற்பட வேண்டிய ஒரு மிக முக்கியமான காலகட்டத்தில் நிற்கிறோம். மக்களை மறந்து உணர்ச்சிக்கு முன்னுரிமை கொடுத்து நாம் உள்ளதையும் இழந்தது போதும். பகுத்தறிவைப் பாவிக்காது பழிக்குப் பழி பார்த்து நடந்து கொண்டதால் நாம் பட்டழிந்தது போதும். ஜனநாயகம் மக்களுக்கானது. மக்களுக்குரியது. மக்களால் உருவாக்கப்படுவது. அதனை நடைமுறைப்படுத்த நாம் எம்மிடம் எஞ்சியுள்ள உள்ள ஒரேயொரு ஆயுதத்தைக் கையில் எடுப்போம். அதுதான் எமக்குள் இருக்கும் எம்மிடம் இருந்து என்றென்றும் பிரிக்கப்பட முடியாத அறிவாயுதம். அறிவாயுதம்! அறிவாயுதம்! அகிலத்தின் அணையாத ஜோதி.

யாழ் குடாநாட்டின் குடிநீர் பிரச்சனை 1950களிலேயே அறிஞர்களால் சுட்டிக்காட்டப்பட்டது. பேசப்பட்டது. தொண்டமானாறு நன்னீர் திட்டம்கூட முன் வைக்கப்பட்டது. கல்வியில் முதன்மை பெற்ற நமது சமூகம் அதனைக் கண்டு கொள்ளவில்லை. விளைவு, இன்று தண்ணீர்ப் போத்தல்களை நம்பி வாழவேண்டிய நிலை எமக்கு. கடத்தப்பட்டவர்கள், காணாமல் போனவர்கள், கொல்லப்பட்டவர்கள் பட்டியல் 1970ம் ஆண்டிலிருந்தே தொடங்கியது. ஆனால் நாம் அதனைக் கண்டு கொண்டது 2009ல் தான். 29 ஆண்டுகளாக அவற்றைக் கண்டும் காணாதது போல் இருந்ததனால் ஏற்பட்ட பேரழிவு மறுபடி நிகழக்கூடாது. எமக்கான உரிமைப் பாதுகாப்புக் கட்டமைப்புக்களைக் அறிவார்ந்த ரீதியில் எம்மத்தியில் உருவாக்குவோம். "வீரம் விலைபோகாது, விவேகம் துணைக்கு வராவிட்டால்". எனவே இனிமேலாவது நாம் "வாதிகளை" நிராகரித்து "பேதங்களை" களைந்து எல்லோரும் இந்நாட்டின் சமகுடிமக்கள் என்ற அறிவார்ந்த சிந்தனையுடன் அணிதிரள்வோம். அதிகாரம் மக்கள் கையில் இருந்துதான் பிறக்கிறது என்பதை அகிலத்திற்கு நடைமுறையில் நிறுவிக்காட்டுவோம்.



படிப்பகம்

# மக்கள் போராடும் போது மலைகளும் வழி விடும் !!!



இடைவிடாது பெய்யும் மழை போல மரணம் தமிழ்மண் எங்கும் இறங்கியது. தலைக்கு மேல் கூப்பிய கரங்களுடன் அருவி போல் கண்ணீரளூ சிந்தும் விழிகளுடன் முடிவு நெருங்கும் மூச்சு சுருங்கும் பயத்தில் இறுகிப் போன குரலில் எம்மக்கள் கும்பிட்டு அழுதார்கள். முழந்தாளிட்டு மன்றாடினார்கள். எந்த ஒரு கடவுளும் எம்மக்களினது அபயக் குரலிற்கு அடைக்கலம் தரவில்லை. கருங்கல்லில் வடித்த அவர்களது சிலைகளது இதழ்கள் வெளிறிப் போயிருந்தன. காற்று சிதைத்த கப்பலைப் போல மரணச்சுழலில் அமிழ்ந்து கொண்டிருந்த எம்மக்களை கடலை வழி விடச் செய்தது போல வாழ விடச் செய்ய எந்தக் கடவுளும் வரவில்லை. ஆயிரம் ஆயிரம் மக்கள் எரிநெருப்பில் கருகி மண்ணிற்குள் புதைந்தார்கள். பாலுக்குப் பாலகன் வேண்டி அழ பாற்கடல் ஈந்த பிரான்கள் பல்லாயிரம் பாலகர்கள் பாலுக்கல்ல, தவித்த வாய்க்கு தண்ணீர் வேண்டி அழுத போதும் இரங்கி வரவில்லை. இலங்கை இராணுவத்தினால் சிதைக்கப்பட்ட எம்பெண்கள் "என் கடவுளே, என் கடவுளே ஏன் என்னைக் கை விட்டீர்" என்று கதறி அழுத போது "நான் எப்பொழுதும் உங்களுடனேயே இருப்பேன்" என்று சொன்ன எந்த நாதனும் எம்பெண்களுடன் இருக்கவில்லை.

காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி, பாலும் தெளி தேனும் பாகும் பருப்பும் படைத்து கும்பிட்ட கடவுள்கள் கண்ணீரும், செந்நீரும் கலத்து ஓட கதறிய போதும் வரவில்லை. ஆனால் சிங்களப் பேரினவாதிகளின் ஆயுதங்கள் சிறிய இடைவேளை எடுக்கும் இடைவெளியில் தமிழ் மண் எங்கும் மீண்டும் கோயில்கள், கோபுரங்கள் புதிது, புதிதாக எழுகின்றன. ஆசாமிகள், ஆன்மீக மாபியாக்கள் ஆச்சிரமங்கள் கட்டுகிறார்கள். மகிந்த ராஜபக்சவிற்கும், மைத்திரி சிரிசேனாவிற்கும் ஆசீர்வாதம் கொடுக்கும் அந்த ஆசாமிகள், கொலைகாரர்களை அண்டிப் பிழைக்கும் ஆன்மீக கிரிமினல்கள் தமிழ் மக்களிற்கு ஆறுதல் சொல்ல, அருள்வாக்கு சொல்ல ஆச்சிரமங்கள் திறக்கிறார்களாம்.

சிவன் திரிசூலம் ஏந்தியபடி முயலகனை காலிலே போட்டு மிதித்தபடி நிற்கும் போது "அன்பே சிவம்" என்று கதையளந்தபடி இந்த இந்திய முதலாளிகள், உளவுநிறுவனங்களின் அல்லக்கைகள், காவி உடுத்த கயவர்கள் வருகிறார்கள். உலகில் எத்தனை கிறீஸ்தவ சபைகள், பிரிவினர்கள் உள்ளனரோ அத்தனை கிறீஸ்தவ சபைகளும் தமிழ் மண்ணில் கிளைகள் திறக்கிறார்கள். ஐரோப்பிய நாடுபிடிப்பாளர்கள் ஆக்கிரமிப்பு செய்தபோது கூட வந்து மக்களின் பசியையும், அறியாமையையும், சாதிக்கொடுமையும் பயன்படுத்தி கிறீஸ்தவத்தை புகுத்தினர். ஆயுதங்களுடன் வந்து நாட்டை கொள்ளையடிக்கும் ஆக்கிரமிப்பாளர்களுடன் சேரளூந்து நின்று கொண்டு "ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைக் காட்டு", "திருப்பி அடிக்காதே" என்று மக்களிற்கு போதித்தனர். காலனியக் கொள்ளையர்கள் நாட்டைக் கொள்ளையடிக்கும் போது, மக்களைக் கொல்லும் போது அமைதியாயிரு என்பதே இந்த திருவாசகங்களின் விஞ்ஞான விளக்கம். இன்று நவதாராளமய பொருளாதார வல்லரசுக் கொள்ளையர்களை நியாயப்படுத்த அவர்கள் மறுபடி வருகிறார்கள்.

இஸ்லாமிய மதவாதிகள் மதம் மட்டுமே முஸ்லீம் மக்களின் வாழ்க்கைக்கு வழி காட்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது ரிசானா போன்ற ஏழைச் சிறுமிகள் வறுமையின் கொடுமையினால் பள்ளிப்படிப்பை பாதியில் விடுகிறார்கள். தாய், தந்தையரை, உடன் பிறந்தோரை விட்டு பாலைவனங்களில் உடல் கருக உழைக்கிறார்கள். அரபுக்காரர்களின் சித்திரவதைகளிற்கு, பாலியல் தொல்லைகளிற்கு பயந்து பயந்து உயிர்வாழ்கிறார்கள். அம்மாவின் மடியில் தலை வைத்து உறங்க வேண்டிய ரிசானா என்னும் சின்னஞ்சிறு குஞ்சின் தலை பாலைவனத்து மதப்பயங்கரவாதிகளால் வெட்டப்பட்டு மண்ணில் வீசப்பட்டது. அந்த படுகொலையை, ஒரு பச்சிளங் குழந்தையிற்கு நடந்த கொடுமையை இலங்கை முஸ்லீம் மதவாதிகள் இஸ்லாமிய சாரியா சட்டம் என்று நியாயப்படுத்தி ஊளையிட்டார்கள். இந்த இஸ்லாமிய அடிப்படைவாதிகள் சொல்வது போல ரிசானா கொலை செய்தாள் அதற்கு இஸ்லாமிய சட்டத்தின் படி சவுதியில் மரணதண்டனை கொடுத்தார்கள் என்றால் அமெரிக்காவுடன் சேர்ந்து ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளைக் கொல்லும் சவுதி அரசிற்கு என்ன தண்டனை?. ரிசானாவை சவுதி அரசு கொலை செய்தது சரி என்று ஊளையிடுபவர்கள் ஏன் சவுதி அரசு அமெரிக்காவுடன் சேர்ந்து கொல்வதைப் பற்றி வாய் திறப்பதில்லை?. ஏனென்றால் மதவாதிகள் எப்பொழுதும் உண்மை பேசுவதில்லை. அவர்கள் எப்பொழுதும் மக்களிற்கு எதிராகவே இருக்கிறார்கள்.

பொதுபல சேனா சிங்கள மக்களின் வறுமைக்கு காரணம் தமிழர்கள், முஸ்லீம்கள், கிறீஸ்தவர்கள் என்று சிங்கள மக்களிற்கும், இலங்கையின் மற்ற இன மக்களிற்கும் இடையில் முரண்பாட்டை ஊதி வளர்க்கிறது. பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் அநாகாரிக தர்மபாலா சொன்ன அதே பொய்களைத் தான் இன்று இவர்கள் சொல்கிறார்கள். இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து சிங்கள மக்களிற்கு சேவை செய்யவே பிறந்தோம், உயிரைக் கொடுத்தும் இலங்கையையும், புத்த தருமத்தையும் காப்பாற்றுவோம் என்று வீரவசனம் பேசும் தலைவர்களே இலங்கையை ஆண்டு வருகிறார்கள். தமிழ் மக்களோ, முஸ்லீம்களோ, கிறீஸ்தவர்களோ என்றைக்கும் ஆட்சிப் பொறுப்பில் இருந்ததில்லை. பின்பு எப்படி இலங்கையின் வறுமைக்கு இலங்கையின் மற்ற இன மக்கள் பொறுப்பாக முடியும். ஆனால் போதுபல சேனா போன்ற பேரினவாதிகள் தமது எஜமானர்களான இலங்கையின் ஆட்சியாளர்களை காப்பாற்றுவதற்காக, அவர்களின் மக்கள் விரோத கொடுங்கோன்மையை, ஊழல்களை மூடி மறைப்பதற்காக இனவாதத்தை தூண்டுகிறார்கள்.

மக்களின் பிரச்சனைகளிற்கு, துன்பங்களிற்கு தீர்வை எந்த மகேசனும் வந்து தரப் போவதில்லை. பரமண்டலத்தில் இருக்கும் எந்த பிதாவும் பசிப்பிணி தீர்க்க விண்ணில் இருந்து மண்ணிற்கு இறங்கி வரப் போவதில்லை. இந்த சமயங்கள், சாதிகள் மக்களை பிரிக்கின்றன. மதங்கள் மக்களின் உண்மையான பிரச்சனைகளை, அல்லல்படும் அன்றாட வாழ்வின் அவலங்களை எதிர்த்து போராடாமல் அவை பூர்வஜென்ம பலன்கள் அவையை மாற்ற முடியாது என்று மயக்கமருந்து ஏற்றுகின்றன. இவ்வளவு துயரங்களிற்குப் பின்னும், வரலாறு காணாத இழப்புகளிற்குப் பின்னும் தமிழ்மக்கள் ஏன் இன்னும் பகுத்தறிவு கொண்டு பார்ப்பதில்லை. எம் குழந்தைகள் ஏங்கித் தவித்திருக்கும் போது கல்லிற்கு தேனும், பாலும் கரைத்து ஊற்றி கண்ட பலன் என்ன என்று ஏன் யோசிப்பதில்லை. இடிந்து போன கோயில்களைக் கட்டும் போது மழை போல் பெய்த குண்டுகளினால் மண் மூடிப்போன பாடசாலைகளை மறுபடி கட்ட வேண்டும் என்று ஏன் நினைத்துப் பார்ப்பதில்லை. மலை பிளந்து மண் சரிந்து மரணப்பலி எடுத்த மலையகத்து மண்ணை ஏன் நாம் நினைத்துப் பார்ப்பதில்லை.

தமது தனிப்பட்ட வாழ்வை தூக்கி எறிந்து விட்டு தமிழ்மக்களிற்காக போராட வந்த போராளிகள் பலரளூ இறந்து போனார்கள். அவர்களின் வயது முதிர்ந்த தாய், தந்தையர் பற்றிக் கொள்ள ஒரு பக்கத் துணை இல்லாமல் பரிதவிக்கிறார்கள். அவர்களின் அன்பு மனைவியர், ஆசைக்குழந்தைகள் ஆதரவின்றி வறுமை கொல்லும் வாழ்வில் வாடுகிறார்கள். அவயங்களை இழந்த போராளிகள் அடுத்த வேளை பற்றிய அச்சத்துடன் அல்லாடுகின்றனர். பெண்போராளிகளை வறுமையும், சமுதாயத்தின் ஒதுக்கும் போக்கும் நிழலாக பின் தொடருகிறது. இவற்றிற்கெல்லாம் என்ன தீர்வு?. ஆயிரக்கணக்கான வருடங்களாக கடவுளையும், மதங்களையும் நம்பி கண்ட பலன் என்ன?. உலகம் தட்டை என்று சொன்ன வில்லேஜ் விஞ்ஞானிகள், தலையில் எழுதியதை தலைகீழாக நின்றாலும் மாற்ற முடியாது என்று மற்றொரு தத்துவத்தை சொல்லி மக்களை பசியையும், பட்டினியையும் சகித்துக் கொண்டு வாழச் சொல்கிறார்கள். ஆனால் வரலாற்றுப் பொருள்முதல்வாதம் "மாறும் என்ற சொல்லைத் தவிர மற்றதெல்லாம் மாறும்" என்று விண்ணதிர முழங்குகிறது. ஆம், மக்கள் போராடும் போது மலைகளும் வழி விடும். உழைப்பாளிகள் ஒன்று சேர்ந்து போராடும் போது தான் பசியும், பட்டினியும்ளூ உயர்வும், தாழ்வும் இல்லாத உலகு ஒன்று எழும்



முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?

உலகமயமாக்கலில் இன்றைய மனிதன் எப்படி தன்னை அடையாளப்படுத்த விரும்புகின்றான்? இந்த விருப்பத்தைத் தீர்மானிப்பது எது? இந்த கேள்விகள் ஒருபுறம் இருக்க, தனிவுடமை சிந்தனையானது தன்னை சமூகத்திலும் மேலானவனாக அடையாளப்படுத்துமாறு கோருகின்றது. அதை எப்படி எந்த வடிவில் மனிதன் செய்ய முனைகின்றான்? அதைத் துண்டுவது எது?

மனிதனின் சமூகத்தன்மை இழக்கும் இன்றைய நடத்தைகள் சுதந்திரமானதா? தனிமனிதனின் தெரிவா? இவை தனிச்சொத்துடமை சமூக அமைப்பின் முத்திரை கொண்டதாகவும், இதையே தனி மனித அடையாளமாகவும் மாற்றிவிடுகின்றது.

இந்த சமூகப் பின்னணியில் மனிதன் தன் சுய அடையாளத்தை வணிகக் குறியீடு ஊடாக காட்டிக் கொள்ளும் தற்பெருமைவாதமே, இன்று பொது வாழ்கையாக மாறிவருகின்றது.

இது எப்படி மனிதத் தெரிவாக்கப்படுகின்றது?

இன்று ஊடகங்களே மனித தெரிவை தீர்மானிக்கின்றவையாக இருக்கின்றது. அதாவது சிந்தனையும், மனிதனை விட பொருள் முதன்மையாக மாறியது. தேவை மறுக்கப்பட பொருள் முதன்மையாக, மிகை உற்பத்தியாக பொருள் மாறியது. இது சந்தையில் குவிந்தது. இறுதியில் எங்கும், எதிலும் பொருளாக காட்சி அளிக்கும் உலகமாக, பொருட்களிலான குப்பையாக உலகம் மாறி இருக்கின்றது. இயற்கையும் அதன் சுற்றுச் சூழலும் சூறையாடப்பட்டு, அதனிடத்தில் இறந்த பொருட்களே உலகெங்குமான காட்சியாக மாறி இருக்கின்றது.

உயிருள்ள இயற்கையும் அதன் சுற்றுச் சூழலும் அழகற்றதாகவும், இறந்த பொருட்கள் அழகானதாகவும்

# வணிக முத்திரையா, மனித அடையாளம்

இன்றைய கட்டமான உலகமயமாதலுக்குள் சீராழிந்து போகும் சுய நடத்தையா?

### வணிக முத்திரை மூலம் அடையாளப்படுத்திக் காட்ட முனையும் உலகமயமாதல் மனிதன்

தனிவுடமை சமூக அமைப்பில் மனிதனின் சமூக அடையாளத்தை மறுத்து, சுய அடையாளமாக வெளிப்படுத்துவதே மனித இயல்பாகின்றது. இன்று அதன் வெளிப்படு தன்மையை உலகமயமாக்கம், வணிக முத்திரையாக (மார்க்கா) மாற்றி வருகின்றது. அதாவது மார்க் நுகர்வையும், அதை வெளிப்படுத்தும் தன்மையையும் மனிதனின் சுய அடையாளமாக மாறி வருக்கின்றது. மனிதனின் பண்பாட்டையும், அவனின் சமூக நிலையையும் வணிக முத்திரையாக குறுக்கியதன் மூலம், உலகத்தைக் குறுக்கியிருகின்றது.

உதாரணம் ஊடாக இதை புரிந்து கொள்வோமாயின் 1980களில் யாழ்நகர கடைத் தொகுதிகளில் வைரமாளிகைக்கான விளம்பர உடையை அணித்தபடியான ஒருவரின் விளம்பர நடத்தைகளை, இன்று வரை கேலிக்குரிய நகைச் சுவையாக நினைவு கூறுபவர்கள் உண்டு. ஆனால் இன்றைய உலகில் தனிமனித பொது நடத்தைகள், அந்த விளம்பர மனிதனின் நடத்தையாக அதாவது வணிக முத்திரை கொண்ட ஒருவனாக தன்னை காட்டிக் கொள்வதை பொதுவில் காணமுடியும். தனிமனிதன் வணிக முத்திரையை முதன்மைப்படுத்தி அதை வெளிபடுத்திக் கொள்வதையே, பெருமையாக கருதும் விளம்பர பிரியராக மனித இனம் குறுகி இருக்கின்றது.



இந்த வகையில் பொருளுக்கு மட்டும் இன்று வணிக முத்திரை (மார்க்) இருப்பதில்லை. பொருளை நுகரும் மனிதனுக்கும் வணிக முத்திரை குத்தப்படுக்கின்றது. மனிதன் வணிக முத்திரை கொண்ட பொருளை நுகரும் அடிப்படையில், சந்தை மனிதனைக் குறுக்கி வருகின்றது. அதாவது வணிக முத்திரையை தனது தெரிவாகவும் அடையாளமாகவும் காட்டிக் கொள்வதே, மனிதனின் அந்தஸ்த்தாக கருதுமளவுக்கு மனிதத்தன்மையை சந்தை காயடித்து விட்டது.

உதாரணமாக கைத்தொலை பேசியை எடுத்தால், தேவைக்கு என்பதைக் கடந்து, சந்தை தனிமனிதன் மேல் திணிக்கின்றது. அதாவது தனது நுகரும் தகுதியை காட்டிக் கொள்ளுமாறு சந்தை கோருகின்றது. அதை மட்டும் செய்யவில்லை, எந்த வணிக முத்திரை கொண்ட தொலைபேசியை நுகரும் தகுதி இருக்கின்றது என்பதை வெளிப்படுத்திக் காட்டிக் கொள்ளுமாறு கோருகின்றது. இறுதியில் வர்க்க ரீதியாக எந்த மார்க்கில், அதிலும் எதை நுகரும் தகுதி இருக்கின்றது என்பதை காட்டிக் கொள்வதே, மனித சாரமாக வெம்பி வருகின்றது.

இன்று மனித நடத்தைகளில் பொருளையும் கடந்து, வணிக முத்திரையை முதன்மைப்படுத்தும் போக்காக, உலகம் குறுகி வருகின்றது. எல்லா நுகர்வுத் தளத்திலும், இன்று இந்த வணிக அடையாளமும், வர்க்க ரீதியான தகுதிக்குரிய தெரிவும் ஆதிக்கம் வகிக்கின்றது.

மனித உழைப்பிலான பொருள் மூலம் உழைப்பை மறுதளித்த தனிவுடமை, இன்று பொருள் மீதான வணிக முத்திரை மூலம் பொருளையே மறுதளிக்கின்றது. தனிவுடமை சிந்தனையை வணிக ஊடாகங்களின் சிறைக்கு வெளியில், மனித சிந்தனையை தோற்றாதவாறு மனிதனின் வாழ்கைமுறை கட்டுப்படுத்தப்படுகின்றது. செய்திகள், நிகழ்ச்சிகள், காட்சிகள்... பரபரப்பாக்கி, அதற்குள் மனிதனை வக்கிரமடைய வைக்கின்றது. இந்த வகையில் கருத்துகளை உற்பத்தி செய்யும் ஊடகங்களும், அதன் கருத்துக்களும் சுதந்திரமானவையோ, உண்மையானதோ அல்ல. மாறாக மனித கருத்தை உற்பத்தி செய்யும்(பெரு) ஊடகங்கள், இன்று நிதி மூலதனத்தினதும், பன்னாட்டு மூலதனத்தினதும் சொத்துக்களாகவே இருக்கின்றது.

உலகமயமாதல் மூலம் இன்று உலகை மேலாதிக்கம் செய்யும் இந்த நிதி மூலதனமும், பன்னாட்டு மூலதனமும் தன் நலனுக்கும் ஏற்ற கருத்தையும், வாழ்வியல் நடத்தையையும் உற்பத்தி செய்கின்றது. சொத்தைக் குவிக்கும் தன் நோக்கத்துக்கு முரணான எந்த உண்மையையும், கருத்தையும் மக்களுக்கு கொண்டு செல்வதை தடுப்பதே, இன்றைய ஊடகங்களின் உள்ளடக்கமாகும். இதன் மூலம் மனிதன் சுதந்திரமாக சிந்திக்க முடியாதவாறு அவனை காயடிகின்ற ஊடக உலகில், மனித்தன்மை என்பதை வணிக குறியீட்டுக்காக விளம்பரப் பிரியனாக மாற்றுகின்றது.

தகவல் ஊடகங்கள் என்பது விளம்பரங்களாகவே மாறிவிட்ட நிலையில், விளம்பரங்களானது பொருளுக்கு பதில் வணிக முத்திரையையே(மார்க்கையே) தகவலாக்கின்றது. மார்க்கை உயர்வானதாகவும், அதையே பெருமைப்படுத்திக் காட்டும் அடிப்படையில், நுகர்வு தன்மையை குறுகியதாக மாற்றிவிடுகின்றது. நுகர்வுச் சந்தையானது மார்க் தன்மை பெற்று விட, மனிதன் தனக்குத் தானே வணிக முத்திரை குத்திக் கொண்டு, அதற்கு அடிமையாக வாழ்வதையே பெருமையாக கருதுவதை பண்பாடாக்கின்றது. பொருளுக்கு அடிமையாக இருந்த மனிதன், இன்று வணிக முத்திரைக்கும், அதில் வர்க்க ரீதியான ஏற்றத் தாழ்வான பொருளுக்குள் அடிமையாக்கப்படுகின்றான். இதைத்தான் ஊடகங்கள் செய்கின்றது.

### மனித நடத்தைகளும், தெரிவுகளும் சுதந்திரமானவையல்ல

மனிதக் கூட்டு உழைப்பு மூலம் உற்பத்தி செய்த பொருளை, தனிச் சொத்துடமை தனதாக்கியது. சொத்துடமை மூலம் பொருளின் தேவையை மறுத்து பொருளை முதன்மையாக்கியதன் மூலம், பொருளை பெறும் போராட்டத்தையே வாழ்கை முறையாக்கியது. இதன் மூலம் பொருளுக்கு மனிதனை அடிமையாகியது.

தனிச்சொத்துடமைக்காக உழைக்கின்ற அடிமையாக, மனித நடத்தை மாற்றியது. பொருளை அடைவதற்கான உழைப்பாக மனிதத் தன்மையை குறுக்கி, பொருளை அடைவதையே சமூகத் தகுதியாக்கியது. பொருளை அடையும் தகுதியைக் கொண்டு, மனிதனை மதிப்பீடுகின்ற சமூகப் பண்பாடுகளையே மனித அறமாக்கியதே தனிச் சொத்துடமையின் பொதுச்சாரம்.

தனிச்சொத்துடமையை குவிக்கின்ற வர்க்கத்துக்காக உழைக்கின்ற அடிமை விலங்காக, மனிதத் தன்மையை குறுகியது. சமூக தன்மையிலான மனிதனின் கூட்டு உழைப்புக்கு பதில், தனிச்சொத்துடமைக்காக உழைக்கின்ற மனிதனாக மனிதத் தன்மையை அடிமையாக்கியது.

தனிச் சொத்துவுடமையிலான உற்பத்தி முறையில் பொருளை முதன்மையாகியதால், அதை அடைவதை நோக்கியே மனித கருதுமளவுக்கு, மனிதனை இயற்கையில் இருந்து அன்னியமாக்கி இருக்கின்றது. உயிரற்று வறண்டு போய் குவிந்து கிடக்கும் பொருளை, மனித நாகரீகத்தின் சிம்மாசனமாக்கிவிட்டது. இதை ரசிப்பதையே மகிழ்சியாக காணுமாறு, ஊடகங்கள் எம்மிடம் கோருகின்றது. மனித பொழுது போக்குகளும், ஓய்வும் என அனைத்தையும் பொருளை சுற்றியே வாழும்மாறும், அதை வாங்கி நுகருமாறும்




கோருகின்றது. இதுதான் தனியுடமையிலான சொத்துடமையை குவிக்கின்றவனினதும், அதையே வாழ்கையாக வாழ்கின்றவனினதும், சிந்தனையும் வாழ்கை முறையுமாகும்.

தனிச்சொத்துடமை குவிப்பதற்கு வெளியில் உண்மையான சுதந்திரத்தையும், வாழ்க்கையையும், போராட்டமின்றி இயற்கையாக நாம் இன்று காணமுடியாது.

பொருளே உலகமாகி பொருளே வாழ்கையாகிவிட்ட நிலையில், மனிதனின் சமூக பொருளாதார ஏற்றத் தாழ்வைக் கடந்து பொருளே எங்குமாகிவிடுகின்றது. பொருளை நுகர்வதை அடைப்படையாகக் கொண்ட பொது மதிப்பீடுகள், தனிமனிதனை முதன்மையாகக் கொண்ட உளவியலுடன் முரண்பட்டைத் துண்டுகின்றது. அனைவரும் பொருளையும், ஒரே வணிக பொருளையும் பெற்றுவிட துண்டும் சந்தையும், அது உருவாக்கும் வாழ்க்கை முறையும் மனிதனை சரிநிகராக சமப்படுத்தவில்லை. மனிதனின் வர்க்க ரீதியான ஏற்றத்தாழ்வுக்கு இடையிலான முரண்பாட்டை கொண்டு, மனிதனை வெம்ப வைக்கும் வண்ணம் வணிக குறியீட்டுக்குள்ளும் வர்க்க தன்மையை கொண்டு வந்திருக்கின்றது.



வர்க்க வேறுபாடு கடந்த வீங்கி வெம்பிய நுகர்வை மனிதனிடம் துண்டும் போது, தன் அடையாளத்தை வணிக முத்திரை கொண்டதாக மாற்றிவிடுகின்ற சாரத்தைக் காண முடியும்.

சந்தை துண்டும் இந்த வர்க்க ரீதியான உளவியில்

தொடர்ச்சி 15 பக்கத்தில்

முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?

படிப்பகம்

# "இலங்கையின் 19வது திருத்தச் சட்டம் ஒரு குறுக்குவெட்டு முகப் பார்வை"

தற்போது 19வது சட்டத் திருத்த நகல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் அரசியலமைப்புச் சட்டதிட்டம் ஜேஆர். ஜயவர்த்தனாவால் ஆவணி மாதம் 1978ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இது இலங்கையில் புதிய தாராளவாதமயமாக்கல் பொருளாதாரக் கொள்கையை அமுல்படுத்த வேண்டி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அதாவது சர்வாதிகார ஆட்சிமுறையை ஏற்படுத்த வேண்டிக் கொண்டுவரப்பட்டது.. அமெரிக்காவின் கடந்த 226 அரசியல் வரலாற்றில் அதன் அரசியலமைப்புச் சட்டம் 17 தடவைகள் மட்டுமே திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இலங்கை அரசியல் அடுத்த 200 வருடங்கள் இப்படியே தொடருமானால் 100க்கு மேற்பட்ட தடவைகள் அது திருத்தம் செய்யப்பட வேண்டியது தவிர்க்க முடியாதது.

1978ல் அரசியலமைப்பு சட்டம் நாட்டு மக்களின் நலன்களுக்காக உருவாக்கப்படவில்லை. ஜெயவர்த்தனாவின் அதிகார வேட்கைக்காகவே உருவாக்கப்பட்டது. அன்று முதல் நாட்டில் அரசியல்வாதிகள் மக்களால் அச்சுறுத்தப்படும் போது அவற்றிற்கான தீர்வுகளாகவே சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. எதிர்க் கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தனது குடியியல் உரிமைகள் பறிக்கப்பட்டதை எதிர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுப்போட்டதன் காரணமாகவே 1வது திருத்தச் சட்டம் (ஷரத்து–140) கொண்டுவரப்பட்டது. அதன் பிரகாரம் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு உள்ள தீர்ப்பு வழங்கும் அதிகாரம் ஜனாதிபதியின் (ஜெயவர்த்தனாவின்) கட்டுப்பாட்டில் உள்ள உச்ச நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது.

ஆளும் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க் கட்சிக்கு தாவுவதை தடுக்கும் அதே வேளை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆளும் கட்சிக்கு மாறுவதை ஊக்குவிக்கும் வகையிலேயே 2வது திருத்தச் சட்டம்(ஷரத்து–161.உ) இடம் பெற்றது. அதன் பிரகாரம் உறுப்பினர் கட்சி மாறினால் அவரது பதவியை இழக்கச் செய்வதற்கு 85 உறுப்பினர்கள் ஒப்புதல் அளிக்க வேண்டும். ஆனால் இது நடைமுறைச் சாத்தியம் அற்றது. எதிர்க் கட்சியிலிருந்து ஒருவர் ஆளும் கட்சிக்குத் தாவினால் அவரைப் பதவியிழக்கச் செய்வதற்கு ஒப்புதல் வழங்க எதிர்க் கட்சியில் 85 உறுப்பினர் இருக்கமாட்டார்கள். அதேவேளை ஆளும் கட்சியிலிருந்து எவரும் பதவி பறி போகும் என்கிற பயத்தில் கட்சி தாவ மாட்டார்கள். எப்படி ஜெயவர்த்தனா தனது ஆசை அபிலாசைகளுக்காக அரசியல் சட்டத்தை எழுதினாரோ அதே வழியில் மகிந்தராஜபக்ச கொண்டு வந்ததே இலங்கை அரசியலமைப்பின் 18வது திருத்தச் சட்டமாகும். இச்சட்டம் இலங்கையில் நடைமுறையில் இருந்து வந்த சுதந்திரக் குழுக்களை (ஐனெநிநனெநவெ ஊழஅஅளைளழைளெ) இல்லாமற் செய்ததுடன் ஜனாதிபதி பதவியின் 2தடவை தவணைக் கட்டுப்பாட்டையும் நீக்கியது. மகிந்தாவும் சகல வல்லமை படைத்த அரசனாக தனது சர்வாதிகார ஆட்சியை நடாத்தினார்.




அதே பாணியிலேயேதான் தற்போதைய 19வது திருத்தச் சட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. கடந்த தேர்தலில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்குவோம் என்ற கோஷத்தின் கீழேயே மக்களிடம் வாக்குக் கேட்டார்கள். மக்களும் அதற்கான ஆணையையும் அள்ளி வழங்கினார்கள். ஆனால் முன்மொழியப்பட்டுள்ள 19வது சட்டத் திருத்தத்தில் நிறைவேற்று அதிகாரம் நீக்கப்படவில்லை. மாறாக கண்துடைப்புச் செய்யப்பட்டள்ளது. அதன்படி,

1.ஜனாதிபதியை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தும் தகைமை சட்டமா அதிபருக்கு மட்டுமே உண்டு

2.தொடர்ந்தும் ஜனாதிபதி நாட்டின் அதியுயர்ந்த தலைவராகவும் அரசாங்கத்தின் தலைவராகவும் நிறைவேற்று அதிகாரம் உடையவராகவும் முப்படைகளின் தளபதியாகவும் இருப்பார்.


3.பாராளுமன்றத்தைக் கலைக்கும் உரிமை முன்பு ஒரு வருடமாக இருந்தது. தற்போது 4 வருடங்கள் 6 மாதம் என மாற்றப்பட்டுள்ளது. ஆனால் தனது வசதிக்கேற்ப பாராளுமன்றக் கூட்டத் தொடரை நிறுத்தவும் மீண்டும் பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கும் ஜனாதிபதிக்கு முன்னரைப் போல் அதிகாரம் உள்ளது.

4.ஜனாதிபதி தனக்கென தான் விரும்பும் அமைச்சுக்களை பிரதமருடைய அனுசரணையுடன் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் பிரதம மந்திரி உட்பட சகல அமைச்சர்களுக்குமான செயலாளர்களை ஜனாதிபதியே நியமிப்பார். இது ஜனாதிபதி ஒரு கட்சியாகவும் அரசாங்கம் வேறு கட்சியாகவும் இருந்தால் மட்டுமே பொருந்தும். இரண்டும் ஒரே கட்சியாக அமையுமானால் முன்னைய ஆட்சி முறையிலிருந்து வேறுபாடு கிடையாது. கடந்த தேர்தலில் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகார ஆட்சிமுறை அகற்றி பாராளுமன்றத்திற்கு நாட்டை நிர்வகிக்கும் அதிகாரத்தை வழங்கவேண்டும் எனக் கோரியே கோஷங்களும் பிரச்சாரங்களும் வாக்குறுதிகளும் வழங்கப்பட்டன. மக்களும் தங்கள் சகல வேறுபாடுகள்––பாகுபாடுகள்–ஏற்றத் தாழ்வுகள் யாவையும் தாண்டி நாட்டுக்கு ஒரு நல்லாட்சி வரும் என்ற நம்பிக்கையுடன் வாக்குப் போட்டார்கள். மைத்திரி சிறிசேன, ராஜித சேனரட்ன, ஜாதிக கெல உறுமய ஆகியோர் அமைச்சர்களையும் அமைச்சின் செயலாளர்களையும் நியமிக்கும் அதிகாரத்தின் ஊடாக ஜனாதிபதி அரசாங்கத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதனைக் கண்டித்து மிகவும் தீவிரமாக பிரச்சாரம் செய்தனர். 25க்கு மேற்பட்ட கட்சிகள் கூட்டாக ஆட்சிமுறை மாற்றம் வேண்டி மக்களிடம் வாக்குக் கேட்டுப் பிரச்சாரம் செய்தனர். மக்களின் அதிகாரம் நிலை நாட்டப்பட வேண்டும் என்றே மக்களும் ஆட்சியை மாற்றினார்கள். ஆள் மாற்றம்தான் இன்று இடம் பெற்றுள்ளது. அதிகாரங்கள் மாற்றப்படவில்லை. மாறாக அதிகாரங்கள் அழகுபடுத்தப்பட்டுள்ளன.




முன்னைய சட்டத்தின் வரைபு மாற்றி எழுதப்பட்டுள்ளதே தவிர அதன் சாரம், அதன் உள் நோக்கம் மாற்றப்படவில்லை. மாறாக மக்கள் மறுபடி திரும்பவும் ஏமாற்றப்பட்டுள்ளனர். ஏற்கனவே இலங்கையின் இடதுசாரி சக்திகள் 19வது சட்டத் திருத்தம் தொடர்பாக பரந்தளவில் மக்கள் மத்தியில் விவாதிக்கப்பட்டு சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தப்பட்ட பின்னரே சட்டமாக்கப்படல் வேண்டும் என வலியுறுத்தியிருந்தனர். பாராளுமன்றக் கட்சிப் பிரதிநிதிகளுடன் இது தொடர்பாக கலந்தாலோசிக்கப்படும் எனவும் இதற்காக ஒரு தேசிய ஆலோசனை சபை நிறுவப்படும் எனவும் மைத்திரி சிறிசேனா தேர்தல் வாக்குறுதியும் வழங்கியிருந்தார். மாறாக ஓரிரு தனிப்பட்டவர்கள் தயாரித்த சட்டத் திருத்தம் ஒன்று இன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. மைத்திரி–ரணில் இருவருக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யவேண்டியதற்குப் பதிலாக அதனையே சட்டம் ஆக்கியுள்ளனர்.

மக்கள் அரசியல் விழிப்புணர்ச்சியுடன் செயற்படாத நிலை தொடரும் வரை இந்த அரசியல் சுத்துமாத்து தொடரவே செய்யும். பாடசாலையில் அரிச்சுவடியுடன் கூடவே அரசியலும் ஒரு பாடமாக்கப்படல் வேண்டும். அரசியல் என்பது மக்களின் அறம் ஆக்கப்படல் வேண்டும். அதுவே நல்லாட்சிக்கு வழி வகுக்கும் நீதியான ஜனநாயக பொறிமுறையாகும்.



# பகுத்தறிவைத்தான் தவறவிட்டோம், பட்டறிவையாவது பயன்படுத்துவோம்

தமிழ் பாதுகாக்கப்பட வேண்டும் என்று முன்மொழிந்தவர்கள் தமிழை முறையாகப் பேசத்தெரியாத ஆங்கிலத்தில் நாடாளுமன்ற அரசியல் விவாதம் நடாத்திக் கொண்டிருந்த தமிழ் தலைவர்கள். அதனால் சிங்களம் கற்க மறுத்து உத்தியோகத்தையும், உத்தியோக உயர்வையும் இழந்தவர்கள் சாதாரண மக்களே. தமிழரசுக் கொடியைத் தூக்கியவர்கள் கொழும்பில் மூலதனங்களைக் கொண்டிருந்த மூத்த தமிழ் தலைவர்களே. அதனால் நிலங்கள் பறிபோயின, குடியேற்றங்கள் முடுக்கிவிடப்பட்டன, அபிவிருத்திகள் முடக்கப்பட்டன.

தமிழீழம் கோரியவர்கள் மேலை நாடுகளில் தங்களது இரண்டாந்தரப் பிரஜை உணர்வினால் உந்தப்பட்ட கோடீஸ்வரத் தமிழர்களே. அதனால்



நாட்டிலும் நாட்டுக்கு வெளியிலும் அகதிகளானதும் யுத்தத்தில் மடிந்ததும் யுத்தத்தின் வடுக்களைச் சுமந்து இன்று வாழ்வதும் சாதாரண மக்களே. இவைகள் தமிழ் பேசும் மக்களின் கடந்த 67வருடகால வரலாறு. கடந்த இந்த வரலாற்றின் முடிவில் நாம் பெற்றுக்கொண்டது கைதடியில் ஒரு மாகாணசபையும் அதற்கொரு கொடியும் மட்டுமே! ஆனால் நீண்ட பெரும் பாரம்பரிய வரலாறு கொண்ட தமிழரசுக் கட்சியின் ஆட்சியில் அமைந்த வட மாகாண சபையின் இன்றைய முதலமைச்சர் கொழும்பைத் தளமாகக் கொண்டவர் என்பது ஒரு முரண்நகையே. மேலும் தமிழர் தாயகத்தின் மூளைப் பகுதியான யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களால் தமிழ் மக்களுக்காக தமிழ் மக்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட சபையில் தீர்மானம் ஒன்றை ஆங்கில மொழியில் தயாரித்து நிறைவேற்றி விட்டு பின்னாடி வந்த சிங்கள ஜனாதிபதியிடம் தமிழில் பேச வேண்டும் என்று கேட்பதும் இலங்கையின் ஜனாதிபதி முன்னிலையில் யாழ்ப்பாணத்தின் முதலமைச்சர் ஆங்கிலத்தில் உரை ஆற்றுவதும் முன்னுக்குப் பின்னான பெரும் முரண்நகையாகும்.

மொழியும் இனமும் அல்ல பிரச்சனை. அதனைத் தூக்கிப் பிடிப்பவர்களால்தான் பிரச்சனை. அவர்களை நம்பி எமக்கான அரசியலை வழி நடத்த அவர்களுக்கு அனுமதி வழங்கி விட்டு தங்கள் வீட்டு வேலிகளுக்குள் இருந்து கொண்டு கிணற்றுத் தவளைகளைப் போல் இருந்து நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்த மக்கள்தான் பிரச்சனை. முன்பொரு காலம் படித்தவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்றிருந்தோம். பின்பு ஆயுதம் பிடித்தவர்கள் ஆக்கி முடிப்பார்கள் என்று ஆரவாரப்பட்டோம். எப்போதும் பார்வையாளர்களாக இருந்தோமேயொழிய நாங்கள் எதிலும்



பங்காளிகளாக இருக்கவில்லை. இருக்க விரும்பவும் இல்லை. பங்காளிகளாக இருந்திருப்போமேயானால் பல வரலாற்றுத் தவறுகளைத் தவிர்த்திருப்போம். பல்லாயிரக் கணக்கான உயிர்களைக் காப்பாற்றி இருப்போம். பல கோடிப் பெறுமதியான உடைமைகளைப் பாதுகாத்திருந்திருப்போம்.

ஒரு மனிதன் தனது தாயின் வயிற்றில் உருவாகும் போதே அவனது அரசியலும் கூடவே பிறக்கிறது. பிறப்புச் சான்றிதழ் முதல் இறப்புச் சான்றிதழ் வரை அவனை அரசியல்தான் வழிநடத்துகிறது, வாழவைக்கிறது. இனிமேலாவது இதனை நாம் உணராவிட்டால், உணர்ந்து செயற்படாவிட்டால் எமக்கும் எமது சந்ததிகளுக்கும் விடுதலையே கிடையாது. நாம் நாலு பக்கமும் வேலி போட்டு நம்ம வீடு நமது குடும்பம் என வாழப் பழகியவர்கள். வீட்டுக்குள் நடக்கும் அடக்குமறைகளை, அநியாயங்களை குடும்பம் என்ற போர்வைக்குள் போட்டு மூடிமறைத்து வைப்பவர்கள். கண்மூடித்தனமான காலாவதியாகிப் போன சம்பிரதாயங்களை சாதி–சமய–ஊர் என்ற கோதாவில்



வைத்துக் கொண்டு நமக்குள்ளேயே முட்டிமோதிக் கொண்டு நிற்பவர்கள். ஊரில் ஒரு பிரச்சனை என்றால் உடனே ஆளுக்கொரு கண்ணாடி போட்டுக் கொண்டே நாம் அதனை அணுகுவோம். நீதி நியாயங்கள் அக் கண்ணாடிகள் ஊடாகவே அளவிடப்படும். நாம் சாதி அடிப்படையில் ஒன்றுபடுவோம். சமய வடிவில் ஒன்றுபடுவோம். ஆனால் ஒரு மனித சமூகமாக ஒன்றுபட்டு எமக்குப் பழக்கமில்லை. ஒரு சமூகமாக நின்று நாம் பிரச்சனைகளை அணுகவில்லை. அதற்குப் நாம் பழக்கப்படவில்லை.

அத்தகைய கல்வி எமக்கு கற்றுத்தரப்படவில்லை. குதிரைக்கு முன்னால் கொள்ளைக் கட்டித் தொங்க விட்டு குதிரையை நடக்க வைப்பதுபோல், பொய் முயலைக் காட்டி நாய்களைப் போட்டியில் ஓட வைப்பதுபோல் பணத்தை மட்டும் குறியாகக் கொண்டதே எமது கல்வி முறையாகும். நாம் பெற்ற கல்வியால் நமது சமூகம் பயன் பெறவில்லை. நமது நாடும் முன்னேறவில்லை. ஊரில் காரில் அடிபட்டு நடு றோட்டில் செத்தும் கிடக்கும் நாய் நாள் பூரா கிடந்து நாறும் வரை அதை எடுத்துப் புதைப்பது என் வேலையில்லை என்று மூக்கைப் பிடித்தபடி பார்த்துக் கொண்டு செல்லும் மனேபாவம் படைத்தவர்கள் நாம். எமது பலவீனங்களை மற்றவர்களின் தவறாகவும், மற்றவர்களின் பலவீனங்களை எமது பலமாகவும் கருதிச் செயற்பட்டு மாண்டு மடிந்து போனவர்கள் நாம். எமது வீரம் செறிந்த விடுதலைப் போராட்டம் தோல்வியடைவில்லை.

சுயநலம் கொண்ட எமது மனப்பாங்கினால் பணத்தைக் குறியாகக் கொண்ட எமது முதலாளித்துவத் தலைமைகளால் விலை பேசி அது விற்கப்பட்டுள்ளது. உலகத்தின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதன் முதலாக முப்படைகளையும் உருவாக்கிப் போராடியது எனப் புகழ் பெற்ற ஒரு விடுதலை அமைப்பை கொண்டிருந்த நாம் எமது தாகமான தாயக இலக்கை அடைய முடியாமற் போனதற்கான காரணங்கள் யாவை? அதேவேளை இந்தப் போராட்டம் பல லட்சம் மக்களை ஓட்டாண்டியாக்கி சில பத்துப் பேர்வழிகளைக் கோடீஸ்வரர்கள் ஆக்கியது எப்படி? உலகில் அதிகமான வீரம் படைத்த பெண் போராளிகளை பெற்றெடுத்துத் தந்த எமது சமூகத்தில் இன்று காணப்படும் பெண்களின் பாதுகாப்பற்ற வாழ்வுக்கான காரணங்கள் யாது? எமது தமிழ்த் தேசிய அடையாளம் மலையகத் தமிழ் மக்களைப் புறந்தள்ளி வைத்துக் கதையாடல் செய்யப்பட்டது ஏன்? காலப்போக்கில் அது முஸ்லீம் தமிழர்களை அதிலிருந்து அப்புறப்படுத்தியது எதனால்? இன்றைய சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைகளில் கிழக்கு ஓரங்கட்டப்படுவது ஏன்? மக்கள் தங்களது ஆதங்கங்களை வெளிக்காட்டும் முகமாகத் தங்கள் வாக்குகளைப் போட்டு வென்றெடுத்துக் கொடுத்த வட மாகாண சபையின் உறுப்பினர்கள் தங்களுக்குள் பிளவுபட்டு எட்டுத்திசையில் நின்று அரச விசுவாசப் பிரமாணம் செய்ததன் தாற்பரியம் என்ன? இவற்றிற்கான விடைகளை நாம் கண்டு பிடிக்காவிட்டால் நமக்கு விடிவு இல்லை.

இதுவரை எமக்குத் தலைமை தாங்கியவர்கள் எமது பகுத்தறிவின் பயன்பாட்டைத் தடைசெய்து வைத்திருந்த காரணத்தினால் இன்று நாம் எமது உயிருக்குயிரான உறவுகளை, உடைமைகளை, உரிமைகளை இழந்து எல்லோரிடமும் கையேந்தி நிற்கிறோம். இன்று எமது பட்டறிவைப் பயன்படுத்தி நமது உரிமைகளை நாமே மீட்டெடுக்கும் காலம் கனிந்துள்ளது. அதற்காக தோழமைக் கரங்கள் நீட்டப்படுகின்றன. அவற்றுடன் நமது கரங்களும் இணையட்டும். அதன் மூலம் எமது மண்ணில் நாம் சுதந்திரமாக வாழும் உரிமையைப் பாதுகாப்போம்.



படிப்பகம்

# சேர்ந்து நடப்போம், வாரும் சகோதர, சகோதரியரே!!!

தமிழ்மக்கள் மீது இலங்கைப் பேரினவாத அரசு தொடுத்த போரின் பின்பு மயான அமைதி நிலவியது. இலங்கை அரச கொலைகாரர்களின் அராஜகங்களின் முன் பிள்ளைகளைப் பறி கொடுத்தவர்கள் கூட வாய் விட்டு விம்ம முடியாமல் கொலைக்கரங்கள் தொண்டைகளை நெரித்துக் கொண்டிருந்தன. முன்னிலை சோசலிசக் கட்சியின் தோழர்கள் காணாமல் போனவர்களின் விபரங்களைத் திரட்டினார்கள். பெற்றோர்களிற்கு, அன்புக்குரியவர்களிற்கு நம்பிக்கை ஊட்டினார்கள். ஏழை மக்கள், உழைக்கும் மக்கள், வருத்தப்பட்டு பாரம் சுமக்கும் மக்கள் ஒற்றுமையுடன், ஒன்று சேர்ந்து போராடும்போது மக்கள் எதிரிகள் காற்றுக் கிழித்த தலையணைப் பஞ்சு போல பதறிப் போவார்கள் என்று மக்கள் சக்தியின் வலிமையை உணர்த்தினார்கள். காணாமல் போனவர்களின் உறவினர்களுடன் சேர்ந்து கொழும்பில் ஒரு ஆர்ப்பாட்டத்தை நடாத்தினார்கள்.

இலங்கை அரசிற்கு தமிழ் மக்களைக் காட்டிக் கொடுத்து வயிறு வளர்க்கும் கொலைகாரக் கும்பல்கள் யாழ்ப்பாணம் எங்கும் மணல் அள்ளி சூழலை நாசமாக்கின. முன்னிலை சோசலிசக் கட்சித் தோழர் இந்த மணல் மாபியாக்களிற்கு எதிராக மக்களுடன் சேர்ந்து குரல் கொடுத்தார். யாழ்ப்பாணத்து மணல் மாபியாக்கள் தோழர்களைக் கடத்தி இலங்கையின் அரசியல் மாபியாக்களிடம் கொடுத்து காணாமல் போகச் செய்தனர். முன்னிலை சோசலிசக்கட்சியின் தோழர் கடத்தப்பட்டு பல வருடங்கள் ஆகின்றன. அவர் இருக்கும் போதே இரவிலும், பகலிலும் நீங்காத நிழலாக வறுமை பின் தொடர்ந்து வந்தது. சமையல், சாப்பாடு, தூக்கம் எல்லாம் அந்த பனை ஓலை வேய்ந்த சிறுகுடிசையில் தான் நடந்தது. மழை பெய்யும் இரவுகளில் ஓலைகளில் இருந்து ஒழுகும் தண்ணீர் தம் செல்லமகளின் மீது படாமல் இருக்க மண்சட்டிகளை தூக்கிப் பிடித்தபடி கணவனும், மனைவியும் விடியும் வரை விழித்திருப்பார்கள்.



அவர் கடத்தப்பட்டு காணாமல் போனபின்பு முன்னிலை சோசலிசக் கட்சி தோழரின் குடும்பத்திற்கு ஒரு சிறுவீடு கட்டிக் கொடுக்க முயற்சி செய்தது. கட்சி பொதுமக்களிடம் நிதி சேர்த்தது. முதலாளித்துவத்திற்கும், இனவாதத்திற்கும் எதிராகப் போராடும் கட்சிக்கு ஏழைமக்கள் தானே நிதி கொடுப்பார்கள். தம் வறுமையிலும் தம்மோடு போராடுபவர்களிற்காக அன்போடு அந்த மக்கள் கொடுத்த நிதியில் தோழர்களால் வீடு கட்ட தேவையான மூலப்பொருட்களை மட்டுமே வாங்க முடிந்தது. பத்திற்கும் மேற்பட்ட தோழர்கள் பகல், இரவாக கல் அறுத்தார்கள், மண் அரிந்தார்கள், மரங்களை வெட்டினார்கள். பொதுமக்களின் பணத்திலும், தோழர்களின் உழைப்பிலும் சிறுவீடு ஒன்று எழுந்தது. மழை பெய்யும் இரவுகளில் ஓலைகளில் ஒழுகும் தண்ணீர் மனத்தை அரிக்கும் பயமின்றி தோழரின் மனைவியும், மகளும் உறங்குகிறார்கள். உழைக்கும் மக்கள் தான் முன்னிலை சோசலிசக் கட்சியின் சொத்துக்கள். அவர்கள் கொடுக்கும் நிதியில் தான் கட்சி பத்திரிகை நடத்துகிறது. அரசியல் கூட்டங்களை நடத்துகிறது. மக்களின் உணவிலே தாம் தோழர்கள் பகிர்ந்துண்டு வாழ்கிறார்கள். கட்சியின் முழுநேர ஊழியர்கள் பசிக்கும் வயிற்றுடன் தான் பாதிநேரம் பொழுதைக் கழிக்கிறார்கள். துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் வெளியிடுவதற்கு அச்சகங்களிடம் கடன் சொல்லித் தான் தோழர்கள் வெளியிடுகிறார்கள்.

முன்னிலை சோசலிசக் கட்சியின் மாணவர் அமைப்பு "கல்வியை தனியார் மயமாக்காதே"!, "கல்வி இலங்கை மக்களின் அடிப்படை உரிமை"! என்ற கோசங்களை முன் வைத்து தொடர்ச்சியாக போராட்டங்களை நடத்தி வருகிறது. இந்த வாரம் கூட கொழும்பு கொள்ளுப்பிட்டியில் மாணவர் அமைப்பு நடத்திய போராட்டத்தில் வீதித்தடைகளையும் விசிறி அடிக்கும் தண்ணீரையும் மீறி மாணவர்கள் வீரத்துடன் போராடினர்.

உயர் கல்வியை தனியார்மயப்படுத்தலை நிறுத்து!

மாணவர்களின் அரசியல் சுதந்திரத்தை மதி!

சுகாதாரக் கல்வியின் தரத்தைக் குறைக்காதே!

மற்றும், அனைத்து பயங்கரவாதச் சட்டங்களையும் உடனே அகற்று! என்ற முழக்கங்களை முன் வைத்து தீரத்துடன் போராடினர். கடற்தொழிலாளர்களுடன் இணைந்து முன்னிலை சோசலிசக் கட்சி □எரிபொருட்களை நியாய விலைக்கு வழங்கு□! என்று மாத்தறை முதல் சிலாபம் வரை போராட்டங்களை நடத்தியது. வெலிவேரியா, சுன்னாகம் என்று தொடர்ச்சியாக தங்களின் பண வெறிக்காக அரச தலைமைகளுக்கு ஊழல் பணத்தைக் கொடுத்து விட்டு நன்னீரை நாசமாக்கும் பணமுதலைகளிற்கு எதிராக போராடி வருகிறது. நாம் எந்த ஆயுதத்தை எடுக்க வேண்டும் என்று நமது எதிரியே தீர்மானிக்கிறான் என்று ஆசான் மாவோ சொன்னான். இலங்கையின் மக்களை இனம், மதம், மொழி என்ற கோடுகளைப் போட்டு பிரிக்கும் இனவெறி அரசியலை உடைக்க வேண்டுமாயின் மக்களிடையே ஒற்றுமையை வளர்க்க வேண்டும் என்று மாவோவின் வழியில் சமவுரிமை இயக்கம் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் கட்டப்பட்டது. பெருவளையிலும், அளுத்கமவிலும் முஸ்லீம் மக்கள் மீது பொதுபலசேனா என்ற மகிந்த அரச கைக்கூலிகள் வெறியாட்டம் ஆடிய போது சமவுரிமை இயக்கமே எல்லா இன மக்களையும் இணைத்துக் கொண்டு கொழும்பு கோட்டையில் போதுபல சேனாவின் இனவெறிக்கு எதிராக போராடியது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் □முகமாற்றம் போதும், அமைப்பு மாற்றத்திற்காக அணிதிரள்வோம்□ என்ற பதாகையை உயர்த்திப் பிடித்தபடி முன்னிலை சோசலிசக்கட்சி நாடு முழுவதும் அரசியல் பிரச்சாரம் செய்தது. இடதுசாரி கட்சிகளுடன் ஐக்கியம் கொண்டு இடதுசாரிய முன்னணி அமைத்தது. சர்வாதிகாரி மஹிந்தவை தோற்கடிப்போம், இன்னொரு சர்வாதிகாரிக்கு இடமளியோம், பொய்யான அரசியலமைப்பு திருத்தம் வேண்டாம், மக்கள் அரசியலமைப்பு நிர்ணய சபையைக் கூட்டு, நவதாராளமய முதலாளித்துவத்தை தோற்கடிப்போம், தேசிய ஒடுக்குமுறைக்கும் இனவாதங்களுக்கும் எதிராக போராடுவோம்.., இவை தான் எமது அரசியல். சமத்துவ சமுதாயம் அமைப்போம்! இனவாதத்தை இலங்கையில் இல்லாமல் செய்வோம்! சகல இனமக்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம்! என்று முன்னிலை சோசலிசக் கட்சி சொல்வதை எதிர்ப்பவர்கள் யாராக இருக்க முடியும்? முதலாளிகள் எதிர்ப்பார்கள். சிங்களப்பேரினவாதிகள் எதிர்ப்பார்கள். தமிழ்க்குறுந்தேசியம் பேசுபவர்கள் எதிர்ப்பார்கள். மதத்தை வைத்து முஸ்லீம் மக்களை ஏமாற்றுபவர்கள் எதிர்ப்பார்கள். பிரமுகர் அரசியல் செய்யும் பிழைப்புவாதிகள் எதிர்ப்பார்கள். முற்போக்கு வேடம் போடும் முன்னாள் கொலையாளிகள் எதிர்ப்பார்கள். நெருக்கடிகள் வரும் போது குழந்தைகள் அழும், நாய்கள் குரைக்கும், பிழைப்புவாத அரசியல்வாதிகள் சரியான சக்திகள் மீது சேறு பூசுவார்கள். முதலாளித்துவத்தின் கொடுமையால் வறுமையில் வாடும் இலங்கையின் மக்களிற்கான போராட்டப்பாதை நீண்டு கிடக்கிறது. கால்கள் சலிக்காமல் புரட்சியின் கீதத்தைப் பாடியபடி கையில் செங்கொடி ஏந்தி சேர்ந்து நடப்போம், வாரும் சகோதர, சகோதரியரே!!!

## அன்புள்ள

## தாய், தந்தையரே, சகோதர, சகோதரியரே!

உங்களுக்கு தெரியும் கடந்த ராஜபக்ச அரசாங்கத்தில் நாம் அனைவரும் கடுமையான துன்பங்களை எதிர் நோக்கினோம். தண்டனை, கடத்தல், காணமலாக்குதல், கைது, கொலை இவைகளுக்குள் முழு நாடும் சிக்குண்டிருந்தது. இப்படியான பல சம்பவங்களுக்கு மத்தியில் லலித், குகன் ஆகியோர் கடத்தப்பட்டது பலத்த எதிர்ப்புக்குள்ளான பிரச்சினையாகும்.

யுத்தம் முடிந்த நிலையில் லலித் வடக்கிற்கு வந்ததும், கிழக்கிற்கு சென்றதும் கஸ்டப்படுகின்ற மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுப்பதற்கேயாகும்.

குகன் அது சம்பந்தமாக நம்பிக்கை கொண்டு லலித்துடன் சேர்ந்து கொண்டார். கடந்த முன்று அரை வருடங்களுக்கு முன் அதாவது 2011 செப்டம்பர் 10ம் திகதி இவர்கள் கடத்தப்பட்டார்கள்.

இன்னும் இந்த ஆட்சியாளர்கள் லலித் குகன் ஆகியோருக்கு என்ன நடந்தது என்று எந்தவொரு தகவலையும் தெரிவிக்கவில்லை.

லலித் குகன் மட்டுமல்ல கடத்தப்பட்ட பலர் என்ன ஆனார்கள் என்று இதுவரையில் எந்தவித தகவலையும் அரசாங்கம் வெளியிடவில்லை. அவர்களது குடும்பத்தினர் தங்களது பிள்ளைகளின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

கடந்த காலங்களில் வடக்கிலும் தெற்கிலும் நடந்த கடத்தல் மற்றும் கொலை சம்பவங்கள் பற்றி இன்னும் எதுவித தகவலையும் புதிய அரசாங்கம் இதுவரையிலும் வெளியிடவில்லை.

புதிய அரசாங்கம் ஜனநாயகம் தருவதாகக் கூறிக்கொண்டு வந்த போதிலும் இதுவரையிலும் இந்தப்பிரச்சினைகளுக்கு எந்த தீர்வையும் எட்ட அரசாங்கத்தால் முடியவில்லை. எனவே நாட்டிற்கு ஜனநாயகம் தருகிறோம் என்று சொன்ன புதிய அரசாங்கம் இன்னும் ஜனநாயகத்தை கொடுக்கவில்லை. தருகிறோம் என்று கூறி மக்களை ஏமாற்றி வருகிறார்கள்.





அதனால் மக்களின் ஜனநாயக உரிமையைப் பெற்றுக் கொள்ள மக்கள் அதிகாரம் அவசியம். மக்கள் சக்தி அவசியம். இடதுசாரிய சக்தி அவசியம்.

வடக்கிலும், தெற்கிலும் ஒன்று சேர்ந்து கட்டியெழுப்பவுள்ள பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் சக்தி அவசியம்.

லலித், குகன் போராடியது இந்த இலக்குகளுக்காகவே. லலித், குகனை கடத்திய ஆட்சியாளர்களுக்கு அவர்களை விடுதலை செய்ய வலியுறுத்துவதுடன் அவர்கள் கேட்டுக் கொண்ட இலக்குகளையும் இணைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

முன்னிலை சோசலிச கட்சி
25.03.2015

**முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?**

படிப்பகம்

ஏபரல் 16ம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு பத்தரமுல்ல, பலவத்தை, பன்டேசியா ஹோட்டலுக்கு வருமாறு சில ஊடகங்களுக்கு தகவல் கிடைத்தது. அதுவும் சில அச்சு ஊடகங்களுக்கு மாத்திரமே அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இலத்திரனியல் ஊடகங்கள் எதுவும் அதில் பங்கேற்றிருக்கவில்லை. மக்கள் விடுதலை முன்னணியின் முன்னால் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க விளக்கமளித்துக் கொண்டிருப்பதை அங்கு சென்ற ஊடகவியலாளர்கள் கண்டனர். 46 வருடகாலம் அநுர. சோமவன்ஸ அந்தக் காலத்திலிருந்து தேசியவாத உபாயங்களையே நம்பினார். தேசியவாதத்தை அரசியல் உபாயங்களுக்கும் அப்பால் எடுத்துச்சென்று அதனை ஜேவிபியின் கலாச்சாரமாக ஆக்குவதற்கும் அவர் முயன்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் திட்டத்தோடு செல்லும் இன்றைய ஜேவிபியின் இப்பயணத்தை சோமவன்ஸவால் சகித்துக் கொள்ள முடியவில்லை நடந்துக் கொண்டிருக்கும் கருத்தாடலானது ஜேவிபி தொடர்ந்தும் இடதசாரிய கட்சியாக இல்லாமல் எவ்வளவு தூரம் வலதுசாரியத்தின் பக்கம் தள்ளப்பட்டுள்ளது, சந்தர்ப்பவாதத்தின் பக்கம் எவ்வளவு தூரம் சென்றுள்ளது, எவ்வளவு சரிந்துள்ளது என்பதற்கான எடுத்துக்காட்டாகும்.

ஜேவிபி தமக்குள் இவ்வாறான கருத்தாடல்,

# சோமவன்ஸ அமரசிங்கவின் வெளியேற்றம் நடப்பது என்ன?



ஜேவிபியின் உறுப்பினராகவும், 24 வருடங்கள் அதன் தலைவராகவும் இருந்த தான் ஜேவிபியின் தந்திரோபாயங்களுக்கு உடன்படாமையால் அதிலிருந்து வெளியேறியதாக ஊடகவியலாளர்களிடம் கூறினார். அவர் அவ்வாறானதோர் அறிக்கை வெளியிடுவதை தடுப்பதற்காக ஜேவிபியின் பிரச்சாரச் செயலாளர் அவ்விடத்திற்கு வந்திருந்தபோதிலும் அவரால் எதுவுமே செய்ய முடியவில்லை. அதன் பின்னர் ஜேவிபியிலிருந்து சோமவன்ச வெளியேறிய செய்தி ஊடகங்களின் தலைப்புச் செய்தியாக வெளிவந்தன. உண்மையிலேயே என்ன நடந்திருக்கிறது? சோமவன்ஸ ஜேவிபியிலிருந்து வெளியேறியது ஏன்? பத்திரிகைகள் மற்றும் சில இலத்திரனியல் ஊடகங்களுக்கு நேர்காணல் வழங்கியிருந்தாலும், அதனால் அவரது தீர்மானம் சம்பந்தமாக எந்த முடிவுக்கும் வர முடியாது. எனவே, ஜேவிபியின் நெருக்கடிக்குள் காணக்கூடிய, காணமுடியாத பக்கங்கள் குறித்து பேசப்பட வேண்டும்.

சோமவன்ஸவின் வெளியேற்றம் அரசியல் பிரச்சினையல்ல. அது அவரது தனிப்பட்ட பிரச்சினையென ஜேவிபி அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது. ஊடகங்களுடனான சந்திப்பின்போது கருத்து தெரிவித்த சோமவன்ஸ தனது வெளியேற்றம் ஜேவிபியின் அரசியல் தந்திரோபாயத்துடன் தொடர்புடையதென கூறியதனால் ஜேவிபியின் கூற்று அப்பட்டமான பொய் என்பது தெரிகிறது. திங்கள் இரவு தெரண தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கலந்துக் கொண்ட அவர் ஜேவிபிக்குள் நடத்திய அரசியல் கருத்தாடல்கள் பலனளிக்காமையால் தான் வெளியேறியதாகக் கூறினார். அந்த கருத்தாடல்கள் என்ன? அது, முன்னிலை சோஷலிஸக் கட்சி உருவாவதற்கு காரணமாயிருந்த ஜேவிபியின் கருத்தாடலைப் போன்று இடதுக்கும், வலதுக்குமிடையிலான கருத்தாடல் அல்லவென்பது சோமவன்ஸ கூறிய கருத்துக்களை பார்க்கும்போது தெரிகிறது. அது வலதுக்கும் வலதுக்குமிடையிலான கருத்தாடல். இலங்கையில் வலதுசாரிய அரசியலில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துவது சிறு முதலாளித்துவ கருத்தாடல். அங்கு பிரதானமாக இருப்பது தேசியவாதக் கருத்தாக்கம் மற்றும் தாராண்மைவாத கருத்தாக்கம். சிறி லங்கா சுதந்திரக் கட்சி தேசியவாதக் கருத்துடையவர்களை ஈர்ப்பதற்கும், ஐக்கிய தேசியக் கட்சியில் தாராண்மைவாத கருத்துடையவர்களை கவருவதற்கும் அவை முயற்சி செய்கின்றன. இந்த இரு கருத்தாக்கங்களுக்மிடையில் ஜேவிபி ஊசலாடுகின்றதேயன்றி, இடதுசாரியத்தை வலுப்படுத்தும் திட்டம் அதனிடம் இல்லை.

ஜேவிபி தற்போது தாராண்மைவாத வலதுசாரிய தந்திரோபாயத்திற்குள் பயணித்துக் கொண்டிருக்கின்றது. ஜனநாயகம், நல்லாட்சி போன்ற கருத்துக்களை சுமந்துக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியுடன் வேறுவிதமான கூட்டு அரசியலில் ஈடுபட்டு, தாராண்மைவாத நபர்களை இலக்காகக் கொண்டே அவர்களது பயணம் அமைந்துள்ளது. ஆனால், சில காலங்களுக்கு முன்னர் ஜேவிபி தேசியவாத தந்திரோபாயத்திற்குள்தான் பயணித்துக் கொண்டிருந்தது. தேசாபிமானம், தேசிய கலாச்சாரம் ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆகிய கருத்துக்களின் ஊடாக ஆரம்பிக்கப்பட்ட அந்தப் பயணம் இறுதியாக யுத்தத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் இனவாதத்தினாலும், சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்ததோடும் முடிவுக்கு வந்தது. தற்போதைய ஜேவிபிக்குள் இந்த இரு வலதுசாரிய போக்குகளும் செயற்படுகின்றன. இந்த இரு உபாயங்களையும் நம்பக் கூடிய, அவற்றிற்காக போராடும் நபர்களும் உள்ளனர். ஜேவிபியின் தற்போதைய தலைவராக உள்ள அநுர திசாநாய, வலதுசாரிய உபாயத்திற்கேற்ப தனது பயணப்பாதையை அமைத்துக் கொண்டுள்ளார். அது, அநுர தாராண்மை கருத்துக்களை கொண்டவராக இருப்பதனால் மட்டுமல்ல. விமல் வீரவன்ஸ வின் அரசியலுக்கு முற்றாக வேறுபட்ட அரசியலை செய்ய அவருக்குள்ள தேவையும் இதில் தாக்கத்தை செலுத்தியுள்ளது. வீரவன்ஸ ஜேவிபியில் இருந்த காலத்தில் அவரது பிரதான எதிராளியாயிருந்தவர்தான் என்பதை எம்மால் புரிந்துக் கொள்ள முடியும். அது குறித்து அவரது விமர்சனத்தை கலாச்சார விமர்சனம் என்ற வகையிலேயே முன் வைக்கிறார். பிரார்த்தனைகளுக்குசெவிமடுத்தல், விரதமிருத்தல், வணக்கம் சொல்லுதல் போன்ற உதாரணங்கள் ஊடாக அவர் முன்வைப்பது அதைத்தான். இங்கு நடப்பது, 2011க்கு முன்னர் ஜேவிபிக்குள் நடந்த இதேபோன்ற வர்க்க ஒத்துழைப்பு மற்றும் வர்க்க போராட்டம், தேசியவாதம் மற்றும் சர்வதேசவாதம், அதிகாரித்துவம் மற்றும் ஜனநாயகவாத மத்தியப்படுத்தலுக்கிடையிலான கருத்தாடலல்ல. இடது □ வலது கருத்தாடலல்ல. உதாரணமாக முதலாளித்துவ கட்சிகளுடன் கூட்டு சேருதல் குறித்து இந்த இரு சாராரிடமும் விவாதமில்லை. அவ்வாறு கூட்டு சேருவது ஐக்கிய தேசியக் கட்சியுடனா, சுதந்திரக் கட்சியுடனா என்பதைப் பற்றியே விவாதமுள்ளது. சமூக பிற்போக்குத்தனங்களுடன் போராடுவதற்குப் பதிலாக அவர்களுடன் நல்லிணக்கத்திற்கு வருவது குறித்து விவாதமில்லை. உபாயமார்க்கமாக பிற்போக்குத்தனத்தை பயன்படுத்துவதா, அந்த பிற்போக்குத்தனத்தை தாம் ஜீரணித்துக் கொள்வதா என்பது குறித்தே விவாதம் உள்ளது.



முரண்பாடு இருப்பதாக காட்டுவதில்லை. எப்படியான அமைப்பு நெருக்கடிகள் வந்தாலும் பிரச்சினையில்லை என்றுதான் ஜேவிபி சொல்கிறது. பிரச்சினை நாட்டுக்கு தெரியும் பட்சத்தில் சொல்கிறார்கள் யார் போனாலும் இது விழ மாட்டாது என்று. இது ஜேவிபியின் கலாச்சாரமாக ஆகியுள்ளது. இம்முறையும் அதே பொய்யை சொல்கிறார்கள். ஜேவிபியின் பொதுச் செயலாளர் ஊடகங்களை அழைத்து மீண்டும் கட்சியில் சேருவது குறித்து சோமவன்ஸவுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருப்பதாகக் கூறினார். ஆனால், திங்கள் இரவு ஒலிபரப்பான மேற்படி தொலைக்காட்சி நிகழ்ச்சியின்போது, தான் எவ்வித பேச்சுவார்த்தையும் நடத்தவில்லையெனவும், ஜேவிபியின் தலைமையிலுள்ள எவரையும் சந்திக்கவில்லையெனவும் சோமவன்ஸ கூறினார். இவ்வாறு, கருத்தாடலொன்று இருப்பது வெளியில் தெரியாமலிருக்க ஜேவிபி பொய் சொல்லுவதுடன், சோமவன்ஸ அமரசிங்க ஜேவிபி குறித்து தனது விமர்சனத்தை நேரடியாக சொல்வதில்லை. அவர் அதனை நேரடியாக சொல்லாமலிருப்பதற்கு மனோவியல் காரணியொன்றும் உள்ளது. இதற்கு முன்னர் ஜேவிபியிலிருந்து வெளியேறியவர்களை விட தான் வித்தியாசமானவர் என்று காட்ட வேண்டிய தேவை அவருக்கு உண்டு. எனவே, சிரமத்துடன் தாராண்மை பண்பாட்டை காக்க அவர் முயற்சி செய்கிறார். அதன் விளைவால் ஜேவிபியிலிருந்து வெளியேறிய காரணத்தை அவரால் தெளிவாகக் கூற முடியவில்லை.

எவ்வாறாயினும், இந்த நெருக்கடி எத்திசையை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றது? ஏற்கனவே ஐதேகவின் வாலாகியுள்ள ஜேவிபி, தனக்குள் செயற்படும் தேசியவாத பிரிவுகளினால் ஏற்படும் அழுத்தம் குறைந்தமையால் சுதந்திரமாக, எதிர்ப்புகளின்றி ஐக்கிய தேசியக் கட்சியின் கிளைச் சங்கமாக நியமனம் பெறும் வரை செல்ல முடியும். இல்லையாயின், "தேசாபிமான சக்திகள்" தன்னிடமிருந்து தூரமாகிவிடுமெனக் கருதி அவசரப்பட்டு தேசியவாதத்தினதும், தாராண்மைவாதத்தினதும் இரு முகங்களை கொள்ளவும் முடியும். ஒட்டுமொத்த அரசியல் பயனீடு பயனீட்டுவாதம், நடைமுறைவாதத்தினை அடிப்படையாக கொண்டுள்ளமையால், எவையாக வேண்டுமானாலும் மாறக்கூடிய நிலைமையை நிராகரிக்க முடியாது. வெளியேறிய சோமவன்ஸ அமரசிங்க தனது தேசியவாத திட்டத்திற்காக சுதந்திரக் கட்சியுடன் இணைய நேரிடும். சில வேளை மஹிந்தரின் அணியுடனும் சேரலாம். மைத்திரியின் அணியுடனும் சேரலாம். தற்போது மைத்திரி அணியின் தேசியவாத கருத்தின் ஆதிக்கம் சம்பிக ரணவக்கலாக்களின் வசம் இருப்பதால், அவ்வாதிக்கத்தை சிதைக்க மைத்திரிக்கு சோமவன்ஸ வை போன்ற பாத்திரமொன்று மிக மிக முக்கியம். வீரவன்ஸவின் ஊடாக பழைய தேசியவாத தந்தை, மகன் உறவை விழிக்கச் செய்தால் சோமவன்ஸவை நெருக்கமாக்கிக் கொள்ள முடியும்.

எவ்வாறாயினும், ஜேவிபியில் ஏற்பட்டுள்ள சரிவு எமக்கு புதிய அரசியல் கருத்தாடலுக்கான கதவை திறந்துவிட்டுள்ளது. அது உண்மையிலேயே 1950களில் பழைய இடதுசாரியம் முகம் கொடுத்த அரசியல் கருத்தாடல்தான். இலங்கையைப் போன்ற சிறு முதலாளித்துவ கருத்தியல்கள் ஆதிக்கம் செலுத்தும் சமூகத்தில் இடதுசாரிய இயக்கங்கள் அந்த கருத்தியலைக் கொண்ட சக்திகளை கைவிடாமலும், அக்கருத்தின் முன்பாக மண்டியிடாமலும் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் சுதந்திரமான அரசியல் பலத்தை வளர்ப்பது எவ்வாறு? இந்த புதிருக்கு விடை தேடவேண்டும். தவறும் பட்சத்தில், அன்று இலங்கை சமசமாஜக் கட்சி மற்றும் கம்யூனிஸக் கட்சிக்குள் நடந்தவை, இன்று மக்கள் விடுதலை முன்னணிக்குள் நடக்கும் தடம்புரளல் மற்றும் சரிவுகள் நாளை இன்னொரு இடதுசாரிய கட்சிக்கும் ஏற்படக் கூடும்.

# சுன்னாகம் கழிவு எண்ணையும் - நிலத்தடி நீரும்

சுன்னாகம் நொதேன் பவர் மின் உற்பத்தி நிலையத்தை சுற்றிய பிரதேச நீரில், எண்ணை மிதப்பது கண்டறிபயப்பட்டுள்ளது. ஆனால் இது நொதேன் பவர் மின் நிலைய கழிவு அல்ல, இந்த நிலையம் ஆரம்பிப்பதற்கு முன்பே எண்ணை படிவம் இருந்து என அறிகைகள் நொதேன் பவர் நிறுவனத்திற்கு சார்பாக வந்துள்ளன.



மறுபக்கத்தில் இலங்கை அரசு எண்ணைக் கழிவு நீரில் கலந்து இருப்பதாகவும், நீரை பருக வேண்டாம் என மக்களுக்கு அறிவித்துள்ளது. ஆனால் வடக்கு மாகாண சபையோ நீரில் கழிவு இல்லை, எனவே அதனை பருகலாம் என்று மறைமுகமாக கூற முற்பட்டு இருக்கின்றது. வடமாகாண விவசாய அமைச்சு "கல்சியப் படிவுகளையும், தூசு துணிக்கைகளையும் எண்ணைக் கழிவு என்று கூறி மக்களைத் திசை திருப்புவதாக" தெரிவித்துள்ளது. இலங்கை மின்சாரத்துறை அமைச்சும், நீதிமன்றமும் மின் உற்பத்திக்கு தற்காலிகத் தடையை விதித்து இருக்கின்றன. இந்த பின்னணியில் இதை "தமிழனுக்கு" (தமிழ் முதலாளிக்கும் – தமிழனின் நிலத்தில்) எதிரான "சிங்களவனின்" சதி என்ற இரு வேறு முரண்பட்ட இனவாத கூச்சல்களும் – ஆய்வுகளும் கூட செய்தியாகின்றது.

இலங்கை அரசும் வடக்கு மகாணசபையும் தமது அரசியல் நிலை சார்ந்து இந்த விவகாரத்தில் முரண்பட்டுள்ளன. மகாண சபையுடன் முரண்பட்ட அரசியல் குழுக்கள், இதை தங்கள் அரசியல் நலனுக்காக பயன்படுத்த முனைகின்றன. இந்த படுபிற்போக்கான குறுகிய அரசியல் பின்புலத்தை பயன்படுத்திக் கொண்டு, சர்வதேச ரீதியில் இயங்கும் தன்னார்வக் குழுக்கள் தங்கள் ஏகாதிபத்திய மூலதனத்தின் நோக்குக்கு அமைவாக இதை பயன்படுத்தத் தொடங்கியுள்ளன.

சுன்னாகம் நொதேன் பவர் மின் நிலைய எண்ணைக் கழிவுகள் சுற்று வட்டார நிலத்தடி நீரை நஞ்சாகி உள்ள இந்த விவகாரம், மக்கள் நலன் சார்ந்து அணுகப்படுகின்றதா? இது தான் எம்முன்னுள்ள கேள்வி.

பல்வேறு சுய நலன்கள் கொண்டவர்கள், இந்த விவகாரத்தில் ஆளுக்கொரு மக்கள் விரோத வழியில் குட்டை கலக்கி வருகின்றனர். உண்மைகள் என்ன? நடக்கின்ற போராட்டங்களும், இதையொட்டிய கருத்துகளும் மக்கள் சார்பானதா என்பதை பார்ப்போம்.

### இதன் பின்னுள்ள உண்மைகளைக் கண்டறிவது எப்படி?

மக்கள் நீரை குடிக்கலாமா இல்லையா என்று விவாகாரத்தை முன்தள்ளி, எண்ணைக்கழிவு அகற்றும் முறைமை சம்பந்தமான விடையத்தை முடக்கி இருப்பதைக் காண முடியும். சட்டத்தின் ஆட்சியை பாதுகாக்க உருவான நீதிமன்றம் தொடங்கி தன்னார்வக் கும்பல்கள் வரை, சுன்னாகம் நொதேன் பவர் மின் நிலையம் கழிவுகளை அகற்றும் முறையை ஆய்வு செய்வதை மறுதளித்துள்ளன. இதற்கு மாறாக இவர்கள் செய்யும் நீரில் கழிவு உள்ளாத என்ற குதர்க்க விவாதங்களும், ஆய்வுகளும் மக்களை ஏமாற்றுகின்ற மோசடிகளாகும்.

சுன்னாகம் நொதேன் பவர் மின் நிலையக் கழிவுகள் பூமிக்குள் விடப்படுவது, மண்ணையும், குடிநீரையும் நஞ்சாக்கும். இதனால் மனிதனுக்கு உடல்நல கேடுகள் மட்டுமின்றி, விவசாய உற்பத்திகளையும், கால்நடை உற்பத்திகளையும் கூட நஞ்சாக்கி மீளமுடியா பாதிப்புக்கு உள்ளாக்கும். இதற்கு எந்தவித சர்வதேச விஞ்ஞான ஆய்வுகளும் அவசியமற்றவை. மனித வாழ்வு பற்றிய பொது அறிவும், இயற்க்கை பற்றிய சமூக கண்ணோட்டமும் இதை தெரிந்து கொள்ளப் போதுமானவை. இப்படி உண்மைகள் இருக்க, அரசியல்வாதிகளும் தன்னார்வ கும்பல்களும் ஆளுக்கொரு அறிக்கையும் போராட்டமுமாக இந்த உண்மைகளை இன்று மறுதளிக்கின்றனர்.



நிலத்தின் கீழ் எண்ணைக் கழிவுகளை புதைக்கும் செயலானது மனித குலத்துக்கு எதிரான மாபெரும் குற்றம். இயற்கைக்கும், மனிதனுக்கும் எதிராக பண வெறியை மட்டுமே குறிக்கோளாக கொண்டு செயற்படும் பெருமுதலாளிகளின் வக்கிரமான செயல். இதனை பாதுகாக்கின்ற, திசைதிருப்புகின்ற செயல்கள் தான், மனித இனத்திற்கு எதிரான தனிவுடமை கொள்கையாகும். எண்ணை கழிவுகளை நிலத்தில் புதைக்கும் செயலானது, அதிக லாபத்தை குறிக்கோளாகக் கொண்ட மனித விரோத தனிவுடமை உற்பத்திமுறையின் பொதுச் சாரமாகும்.

### இந்த வகையில

1.எண்ணைக் கழிவை நிலத்தில் புதைப்பதனை குற்றமாகக் கொண்டு, குறித்த நொதேன் பவர் மின் நிறுவனத்தை தண்டிக்க கோரி போராடி இருக்க வேண்டும்.

2.நிலத்தில் புதைத்த நிலத்தடி கழிவுகளை சுத்தம் செய்ய, அந்த நிறுவத்தின் சொத்துகளை முடக்கக்கோரி போராடி இருக்க வேண்டும்.

3.சுற்றுச் சூழலை நஞ்சாக்கும் உற்பத்தி முறையை, நிரந்தரமாக தடை செய்யக் கோரி போராடி இருக்க வேண்டும்.

இந்த வகையில் எவரும் போராட்டங்களை முன்னெடுக்கவில்லை. மக்களை திசை திருப்பும் வண்ணம் "நீரை பருகலாமா இல்லையா" என்றும், மிதப்பது "எண்ணை கழிவு தானா?" என்றும் மக்களை ஏமாற்றும் மோசடியில் ஈடுபடுகின்றனர்.

### இதன் பின்னுள்ள குறுகிய நோக்கங்கள் என்ன?

லாபத்தை மட்டும் நோக்கக் கொண்ட தனிவுடமையிலான முதலீட்டை பாதுகாக்கும், அரசியலே இதன் பின் இயங்குகின்றது. லாபத்தை மையமாகக் கொண்ட உற்பத்தி முறைமையானது, இயல்பாகவே சுற்றுச் சூழலுக்கும் மனித இனத்திற்கும் எதிரானது. இதன்மேல் கேள்வி எழுப்புவதையோ, மக்கள் சிந்திப்பதை தடுப்பதுமே, போராட்டங்களை தலைமை தாங்கி நடத்துபவர்களின் பொது அரசியல் உள்ளடக்கமாக இருக்கின்றது.

அதீத லாபத்துக்கு உதவுவதே, தனிவுடமையை ஆதாரிக்கும் அரசியல் கட்சிகளின் அடிப்படைக் கொள்கையாகும். அதேநேரம் சிறு உற்பத்திகளை அழித்து பெரும் உடமைகளுக்கு உதவுவதே அதன் நடைமுறையுமாகும். இந்த வகையில் மூலதனத்துடன் கூட்டமைத்துக் கொண்டு, அதை பாதுகாக்கும் மாமா வேலையைத்தான்



"நீரில் கலந்த கழிவு எண்ணை" விவகாரத்திலும் இக்கட்சிகள் செய்கின்றன.

மறுபுறத்தில் களமிறங்கும் சர்வதேச தன்னார்வ நிறுவங்களின் நோக்கம், □சுத்தமான குடிநீரை□ சந்தைப் பொருளாக மாற்றுகின்ற சதியாகும். சுத்தமான நீரை பணம் கொடுத்து வாங்கிக் குடியுங்கள், கழிவைக் குடிக்காதீர்கள் என்பதை தங்கள் வழியில் மக்களுடன் இணைந்து போராடுவது போல் போரடி, கூறமுற்பட்டு இருக்கின்றனர். சர்வதேச மூலதனம் கொடுக்கும் நிதியின் தயவில் இயங்கும் தன்னார்வ நிறுவனங்கள் நோக்கமானது, தண்ணிரை சந்தைபடுத்துவதுதான். இன்று வடக்கில் தண்ணீர் போத்தல் வியாபரம் கொடிகட்டி பறப்பதற்கு, கிணற்று நீரை கழிவாக காட்டுவது அவசியமாக உள்ளது. தனிபட்ட நபர்கள் தண்ணீரை பணம் கொடுத்து வாங்கும் முறைமையானது, தனியார் நீர் விநியோக முறைக்கான பொது அடித்தளத்தை உருவாக்கி வருகின்றது. வடக்கு கிணறு நீரை பாவனைக்கு உதாவாததாக காட்டும் பொது உளவியலை தயாரிப்பதே, தன்னார்வ நிறுவனங்களின் மைய செயற்படாக மாறி இருக்கின்றது.

இன்று உள்ளூர் அரசியல்வாதிகள் முதல் தன்னார்வ நிறுவனங்கள் வரை, இயக்கையான நீரை பருகும் மக்களின் அடிப்படை உரிமைக்காகவும், அதனை பாதுகாக்கவும் போராட்டவில்லை. மாறாக அதீத லாபத்தை நோக்கக் கொண்ட மூலதனத்தின் நலனில் இருந்து இதை திசை திருப்புவதையும், தங்கள் குறுகிய அரசியல் நலன் சார்ந்து இதை கையாள்வதையும் காணமுடியும்.

இயற்கை மற்றும் மக்கள் நலன் சார்ந்து அணுகும் பொது உற்பத்தியின் உள்ளார்ந்த நோக்கத்தை இனம் காண வேண்டும். அதே நேரம் அரசியல் கட்சிகள் மற்றும் தன்னர்வ தொண்டு நிறுவனங்களின் நோக்கத்தின் பின்னுள்ள மனித விரோத இயற்கை விரோத தனிவுடமைக் கண்ணோட்டத்தையும் இனம் கண்டு கொள்ள வேண்டும். இது மட்டுமே இதன் பின்னுள்ள உண்மைகளை மட்டுமல்ல, மக்கள் நலன் சார்ந்த உண்மையான மக்கள போராட்டத்துக்கு வழிகாட்டும்.



படிப்பகம்

# கொடிமரமே மாயமாய் மறைந்த மர்மம் என்ன மருதடி பிள்ளையானே!!!

கொடிமரம் என்ன உயரம் இருக்கும்?. கோயில் கொடிமரத்தின் உயரத்தைக் கேட்கிறேன். குறைந்தது இருபது அடி இருக்கும். யாழ்ப்பாணத்து மானிப்பாய் மருதடிப்பதியில் இரு மரபும் துய்ய வந்த சைவ வேளாள பெருங்குடிகளின் கண் கண்ட தெய்வமான பிள்ளையாரின் கொடிமரம் காணாமல் போய்விட்டது. மருதடி பிள்ளையார் கோயிலில் சித்திரை மாதம் கொடியேறி சித்திரை புதுவருட தினத்தன்று தேர்த்திருவிழா நடக்கும்.மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோயிலில் பல வருடங்களாக கட்டிடவேலை நடந்து கொண்டிருந்தது. இந்த வருடம் கட்டிட வேலை முடிந்து திருவிழாக்கள் தொடங்க இருந்த நேரத்தில் வேலைகளிற்காக கழட்டி வைக்கப்பட்ட இருபது அடி உயர கொடிமரம் காணாமல் போய் விட்டது.

கொடியேற்றத் திருவிழாவிற்கு சலவைத் தொழிலாளிகளான வண்ணார் சமுகத்தவர்கள் கொடிச்சீலை கொடுக்கும் மரபு இருந்து வந்திருக்கிறது. இப்போது கோயில் திருத்திய பிறகு கும்பாபிசேகம் செய்த பிறகு வண்ணார்களிடமிருந்து ஏன் சீலை வாங்கி கொடியேற்றம் செய்ய வேண்டும் என்ற வேள்ளாள வெறியில் கொடிமரத்தையே கொண்டு போய் ஒளித்திருக்கிறார்கள் சாதிவெறியர்கள். போராட்ட காலங்களில் ஒழித்திருந்த சாதிவெறி பிடித்த காடையர்கள் இப்போது மறுபடியும் வெளி வந்து நஞ்சைக் கக்குகிறார்கள். புலம்பெயர் நாடுகளில் இருந்து செல்லும் பணபலமும் சேர்ந்து கொள்ள வெள்ளாளத் திமிர் ஒடுக்கப்பட்ட மக்களை முன்பு போல தமது அடிமைகளாக வைத்திருக்க பார்க்கிறது. வண்ணார் சமுகத்தவர்கள் காவல்துறைக்கும், நீதிமன்றத்துக்கும் போய் போராடிய பின்பு கொடிமரம் மறுபடியும் கோயிலிற்கு வந்து சேர்ந்திருக்கிறது.

மருதடிப் பிள்ளையார் இப்படியான விளையாட்டுகளில் விண்ணன். அவர் இந்த மாதிரியான கண்கட்டு வித்தைகளை முன்பும் செய்திருக்கிறார். எல்லா சைவக் கோயில்களிலும் ஆதிமுலம் கிழக்கைப் பார்த்தபடி இருக்கும் பிரதானவாசல் கிழக்கு வாசலாக இருக்கும். மாறாக மருதடிப் பிள்ளையார் மேற்கு நோக்கி பார்த்தபடி இருக்கிறார். பிரதான வாசல் மேற்கு வாசலாக இருக்கிறது. மருதடிப் பிள்ளையாருக்கு வந்த சோதனை என்ன? அவர் ஏன் கிழக்கு பக்கமாக பார்க்காமல் அந்தப் பெரிய உடம்பை கஸ்டப்பட்டு மேற்குப் பக்கமாக திருப்பினார்?. ஏனென்றால் கோயிலிற்கு முன்பாக இலங்கையின் முதலாவது நவீன மருத்துவக் கல்லூரியுடன் சேர்ந்த மருத்துவமனை □மானிப்பாய் மருத்துவமனை□, என்ற பெயரில் அமெரிக்க புரட்டஸ்தாந்து மிசனை சேர்ந்த வைத்தியக் கலாநிதி சாமுவேல் கிறீன் அவர்களால் 1848 இல் தொடங்கப்பட்ட மருத்துவமனை இருக்கிறது. அங்கு வரும் நோயாளிகளையும் அங்கு மரணித்த மனிதர்களையும் காணப் பிடிக்காமல் தான் பிள்ளையார் சிலை மேற்குப் பக்கமாக திரும்பி விட்டதாம் என்று பக்தகோடிகள் பஜனை பாடுகிறார்கள்.



போர்த்துகீசர், ஒல்லாந்தர், பிரித்தானியர் என்று வரிசையாக வந்த ஆக்கிரமிப்பாளர்கள் எமது மக்களைக் கொன்றார்கள். நாட்டைக் கொள்ளையடித்தார்கள். விக்கினங்களை தீர்க்கும் விக்கினேஸ்வரன் என்று சொல்லப்படுபவர் அதை எல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாராம். மருத்துவமனையிலிருந்து வரும் நோயாளிகளின் வலி மிகுந்த முனகல்களும், மரணித்தவர்களின் அன்புக்குரியவர்கள் கதறி அழும் வேதனைக் குரல்களும் தான் அவருக்கு பிரச்சனையாக இருந்திருக்கிறது. தமது பருத்த பின்பக்கத்தை திருப்பி காட்டி மருத்துவமனைக்கு தமது எதிர்ப்பை தெரிவித்திருக்கிறார்.

சரத் பொன்சேகாவையும், மைத்திரி சிறிசேனாவையும் ஆதரித்துக் கொண்டு போர்க்குற்ற விசாரணை வேண்டும், தமிழ் மக்களின் நிலங்களை விட்டு இராணுவம் வெளியேற வேண்டும் என்று தீர்மானம் போடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மருதடிப்பிள்ளையாரின் இந்த பின்னோக்கிய எதிர்ப்பு தான் முன்னுதாரணமாக இருந்திருக்க வேண்டும்.

சைவ சமயத்திற்கு ஏழைகளையும், நோயாளிகளையும், ஒடுக்கப்பட்டவர்களையும் என்றைக்குமே பிடிப்பதில்லை என்பதைத் தான் மானிப்பாய் வெள்ளாள பெருங்குடிகளின் இந்த கட்டுக்கதை மறுபடியும் எடுத்துச் சொல்கிறது. இந்திய ஆக்கிரமிப்பு படைகளின் கொலைகளிற்கும், கொ□ரங்களிற்கும் பயந்து கோயில்களிலும், கிறீஸ்தவ தேவாலயங்களிலும் மக்கள் தஞ்சம் அடைந்திருந்த அந்த அச்சமூட்டும் தருணங்களிலும் யாழ் சைவ வேளாளவெறி தனது மூடத்தனங்களை, மக்கள் விரோத பயங்கறவாதத்தை மறந்து விடவில்லை. கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் கோவிலில் தஞ்சமடைந்திருந்த தாழ்த்தப்பட்ட மக்களை மழை ஒழுகும் பகுதியில் இருக்குமாறு ஒதுக்கி வைத்த மனிதாபிமானம் என்ற ஒன்றே இல்லாத கொக்குவில் சாதிவெறியர்களை தோழர் ஒருவர் எதிர்த்து போராடினார்.

தாழ்த்தப்பட்ட மக்கள் அசைவம் உணவு உண்டு விட்டு கோவிலிற்குள் வருகிறார்கள் என்று மரணம் சூழ்ந்த அந்த வேளையிலும் கொக்குவில் வெள்ளாள சாதிவெறியர்கள் தூய்மை பேசினார்கள். இது கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் கோவிலில் மட்டும் நடந்த விதிவிலக்கான ஒற்றை நிகழ்வு அல்ல. தமிழ் மண் எங்கும் பொதுப்படையாக நடந்த துயர நிகழ்வுகள். போரினால் இடம்பெயர்ந்து பசியிலும், தாகத்திலும் தவித்த வாய்க்கு ஒரு சிறு துளி நீர் அருந்தப் போனவர்களை சாதி பார்த்து கிணற்றில் தண்ணீர் அள்ள விடாமல் தடுத்த பேய்கள் உலாவும் தேசம் இது.

காஞ்சி சங்கராச்சாரி சேரிமக்கள் குளித்து சுத்தமாக இருக்க வேண்டும் என்று தனது ஊத்தை வாயால் சொன்ன பிராமணவெறி தான் இங்கு யாழ்ப்பாண வேளாள வெறியாக வெளி வந்தது. தூய ஆரிய இனம் தான் வாழத் தகுந்தது என்று கிட்லரும், நாசிகளும் இலட்சக்கணக்கணக்கான யூத மக்களையும், ரோமானிய ஜிப்சி மக்களையும் நச்சுவாயு மூலம் கொன்றதற்கு எந்த விதத்திலும் குறைந்ததல்ல ஒரே மொழி பேசும், ஒரே இன மக்களை சாதி கொண்டு பிரிக்கும் சைவ வேளாள வெறி.

இது தான் சைவசமயம் என்னும் பொய்யும், புளுகும் நிறைந்த குப்பை. மனிதர்களை மனிதர்களாக மதிக்காமல் சாதி என்னும் பகுத்தறிவிற்கு ஒவ்வாத கீழ்த்தரமான மனிதகுல விரோத பயங்கரவாதிகளின் சமயம். பன்றிக்கு பன்றிக்குட்டி பிறக்கும். கழுதைக்கு கழுதை பிறக்கும். ஆனால் சைவசமயிகள் என்னும் ஆறறிவு படைத்த அறிவுக்கொழுந்துகளைப் பொறுத்தவரை மனிதருக்கு மனிதக் குழந்தைகள் பிறப்பதில்லை. பிராமணக் குழந்தைகள், வெள்ளாள குழந்தைகள் என்னும் மேற்சாதிக் குழந்தைகளும் கரையார் குழந்தைகள், பள்ளர் குழந்தைகள், பறையர்கள் குழந்தைகள் என்னும் கீழ்சாதி, தீண்டப்பட தகுதியற்ற குழந்தைகளுமே இவர்களைப் பொறுத்தவரை சைவசமயத்தில் பிறப்பதாக இந்த மண்டை கழண்ட சாதிவெறிமுட்டாள்கள் கதை சொல்கிறார்கள்.



எல்லாப் பிள்ளைகளும் ஒரே மாதிரியே பிறக்கின்றன. பிராமணருக்கு பிறக்கும் குழந்தைகள் பூணூலுடன் பிறப்பதில்லை. எல்லாக் குழந்தைகளும் பிறந்தவுடன் அம்மா என்றே அழுகின்றன. பிராமணக் குழந்தைகள் மாதா என்று சமஸ்கிருதத்தில் அழுவதில்லை. இந்த அடிமுட்டாள்களிற்கு, மெத்தப் படிச்ச மேதாவிகள் என்று பீற்றிக் கொள்ளுபவர்களிற்கு இந்த சின்ன உண்மை கூடத் தெரியாது போல உயர்வு தாழ்வு பேசுகிறார்கள்.

இருபத்தொராம் நூற்றாண்டிலும் இப்படியான மூடத்தனங்களை காவித் திரியும் சைவசமய பயங்கரவாதிகளை செருப்பால் அடித்து துரத்தாமல் சமயம், பண்பாடு, மரபு என்ற பெயரில் தமிழ் மக்கள் சேர்ந்து போகிறார்கள். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், மனிதம் இல்லாத சமுதாயம் என்றைக்குமே முன்னோக்கி பயணிக்கப் போவதில்லை. எவ்வளவோ தூரத்திலிருந்து வந்த சிறு அய்ரோப்பியர் கூட்டம் இலங்கை. இந்தியா போன்ற நாடுகளை, பெரும் மக்கள் கூட்டத்தை எப்படி வெல்ல முடிந்தது?.

ஏனெனில் மக்கள் ஒரு சமுதாயமாக இருக்கவில்லை. சைவசமயத்தின் சாதி என்னும் முள்வேலி அவர்களை சிறு சிறு குழுக்களாகப் பிரித்து வைத்திருந்தது. அதனால் ஒன்றிணைந்து ஒரு சமுதாயமாக அவர்களால் போராட முடியவில்லை. இதுவே சிங்களப் பேரினவாதத்திற்கு எதிரான போரிலும் நடந்தது. அனுபவங்களில் இருந்து கற்றுக் கொள்ளாத சமுதாயம் அடிமைத் தளைகளில் இருந்து விடுபடப் போவதில்லை என்பதை வரலாறு மீண்டும், மீண்டும் எழுதிச் செல்கிறது.



படிப்பகம்



எல்லோரும் தமிழர்கள் தான். ஆனால் நாங்கள் வெள்ளாளர். நீங்கள் கரையார். எங்கள் மகன் உங்களது மகளை காதலிக்கிறேன் என்று அடம் பிடிப்பதனால், தான் நாங்கள் வேறு

திரிதல், கள்ளக் கோழி பிடித்தல், சந்தர்ப்பம் கிடைத்தால் காதலிக்கும் பெண்ணுடன் உடல் உறவு கொள்ளுதல் போன்றன எல்லாவற்றினையும் செய்தாலும், திருமணம் என்று வரும் போது தாய் தந்தையின் சொற்கேட்டு நடக்கும் புத்திரசிகாமணிகளாக மாறிவிடுவார்கள். அப்போது தான் பெற்றோர் பார்க்கும் சொந்த சாதிப் பெண்ணை கொழுத்த சீதனத்துடன் கட்டிட முடியும். யாராவது வீணாய் போனவர்கள் காதல், கத்திரிக்காய் என்று கதைத்தால், நாங்கள் அப்பா அம்மாவிற்கு அடங்கின பிள்ளைகளாக்கும் என்று கை கட்டி வாய் பொத்தி சொல்லிவிடுவார்கள்.

மேலை நாடுகளில் சிறுவகுப்புகளில் இருந்தே ஆசிரியர்களினால் ஒருவரை மனரீதியாகவோ, உடல் ரீதியாகவோ



விருப்பப் பாடமாகவோ அல்லது இரண்டாவது மொழிப் பாடமாகவோ இங்கிலாந்தில் கற்க முடியும். ஆனால் பெரும்பாலான பெற்றோர்கள் தாமே சொல்லிக் கொடுக்க கூடிய தமிழ் மொழியை விட்டு விட்டு பிரெஞ்சு அல்லது

ஜேர்மன் மொழிகளை பெரும் பணம் செலவழித்து

# பத்து மாதத்தில் உயர்சாதி குழந்தை பெறுவது எப்படி?

வழியில்லாமல் உங்களது மகளை மணம் செய்ய எங்களது தராதரத்தை விட்டு இறங்கி வந்து சம்மதித்திருக்கிறோம். திருமணத்திற்கு நீங்களும் உங்கள் பிள்ளைகளும் மட்டும் தான் வரலாம். உங்களது உறவினர்கள் ஒருவரும் வரக் கூடாது. உங்கள் சாதிக்காரர்கள் திருமணத்திற்கு வந்தால் எமது சொந்த பந்தங்கள் எம்மைக் கேவலமாக பார்ப்பார்கள். இது நடந்தது இலங்கையிலோ அன்றி தமிழ் நாட்டின் தொலை தூரக் கிராமம் ஒன்றிலோ அல்ல. என்ன எங்கே என தலையை போட்டு குழப்புகின்றீர்களா?. இப்படியான கேவலம் நடந்தது லண்டனில் தான். லண்டனில் பிறந்து கல்வி கற்று தொழில் புரியும் ஒரு ஆணும் பெண்ணும் திருமணம் செய்ய முற்பட்ட போது குறுக்கே வந்து குரைத்த ஒரு சாதி வெறிக் கும்பலின் கூச்சல்கள் தான் இவை.

இரண்டாவது நிகழ்வும் லண்டனிலேயே நிகழ்ந்துள்ளது. ஒரே இடத்தில் வேலை செய்த ஒரு உயர்சாதி வெள்ளாள ஆணும், தாழ்த்தப்பட்ட சாதிப் பெண்ணும் காதலித்தனர். அப்பெண் தனது சாதி பற்றி ஆரம்பத்திலேயே தன் காதலனுக்கு சொல்லியிருந்தார். பெண் வீட்டில் திருமணம் முடிக்கும் படி வற்புறுத்தியதால் காதலன் அவரின் வீட்டில் தனது காதல் கதையினைக் கூறி, தான் அப் பெண்ணை மணம் முடிக்க வேண்டும் என்று சம்மதம் வேண்டி நின்றான். சாதி குறைந்தவர்களின் வீட்டில் நாங்கள் தண்ணீர் கூட குடிக்க மாட்டோம். நீ பெண் எடுக்க போறியோ? நீ அந்த பெண்ணை மணம் செய்தால் நான் நஞ்சு குடித்து சாவேன் என்று அந்த மணாளனைப் பெற்ற மகராசி வீரசபதம் செய்தாள். ஆப்பிள் யூஸ் குடிப்பேன் என்பது போல சர்வசாதாரணமாக நஞ்சு குடிப்பேன் என்கிறாளே, மணந்தால் மரணதேவி என்று வசனத்தினை மாற்றி பொம்பிளை வீரப்பா மாதிரி பேசுகின்றாளே அம்மா என்று பொடியன் பயந்து போனான். தாயில்லாமல் நானில்லை என்று குழந்தை அழுதது. சிறிது காலம் பொறுத்துப் பார்த்த பெண் இன்னொருவரை வீட்டாரின் நெருக்குதலினால் மணம் செய்ய போனபோது, உன்னை விட்டால் யாருமில்லை என்று காதலன் வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறியது. அம்மா சாகும் வரை எனக்காக பொறுத்திரு என்றது. உன்னை போன்ற கோழைக்கு என் வாழ்வில் இடமில்லை என்று உறுதியாக மறுத்து விட்ட அப்பெண் தனது வீட்டாரின் விருப்பத்திற்கு இணங்கி புது வாழ்வு தொடங்கினாள்.

தமிழ் இளைஞர்கள் போல், குறிப்பாக யாழ்ப்பாண தமிழ் இளைஞர்கள் போல் நல்லவர்கள் யாருமில்லை. ஏனென்றால் வாலிப வயதில் புகை பிடித்தல், மது அருந்துதல், பாடசாலைக்கு போகாது வெளியே சுற்றித்

துன்புறுத்துவது சட்டப்படி குற்றம் என்பது சொல்லிக் கொடுக்கப்படுகின்றது. ஆனால் தமிழ் குழந்தைகள் சிறு வயதிலிருந்து கமகம பெற்றோரின் பிற்போக்கான



நிலப்பிரவுத்துவ சிந்தனை முறைகளிற் கூடாக வளர்க்கப்படுவதினால் தாராளவாத பொருளாதார முதலாளித்துவ வாழ்க்கையினை வாழ்ந்தாலும், சிந்தனை முறைகளில் பல நூற்றாண்டுகள் பின்னோக்கிய இருண்ட காலத்தினுள் வாழ்கின்றார்கள் என்பதற்கு மேலே கூறிய நிகழ்வுகள் எடுத்துக் காட்டாக இருக்கின்றன.

பெரும்பாலான தமிழ் பெற்றோர்கள் மேலைநாடுகளில் இரண்டு இடங்களிற்குத் தான் தமது குழந்தைகளை கூட்டிச் செல்வார்கள். சைவ பெற்றோர் என்றால் கோயில்களிற்கும், கிறிஸ்தவ பெற்றோர்கள் தேவாலயங்களிற்கும் இரண்டாவதாக இந்த இடங்களை விட மிகவும் பயங்கரமான இடமான தமிழ்ப் படங்கள் ஓடும் திரையரங்குகளிற்கு கூட்டிச் செல்வார்கள். கோவில்களிற்கு போகும் ஒரு குழந்தை சமஸ்கிரிதத்தில் வழிபாட்டினை செவிமடுக்கின்றது. சமஸ்கிரிதம் தான் கடவுளுக்கு பூசை செய்யும் பாசை என்பதைக் கேட்டு வளர்கின்றது. மொழிகளிற்கிடையே உயர்வு, தாழ்வு கற்ப்பிக்கப்படுகின்றது. தாழ்வு என்று சொல்வது போதாது என்று தமிழ் ஒரு "நீச பாசை" என்று மூத்த சங்கராச்சாரி வாக்குமூலமே கொடுத்து விட்டு பரலோகம் போயிருக்கின்றது.

தனது தாய் மொழியான தமிழை விட ஒருவராலும் பேசப்படாத செத்த மொழியான சமஸ்கிரிதம் தான் உயர்ந்த மொழி என்று கற்பிக்கப்படும் ஒரு குழந்தை, எப்படி தன் தாய் மொழியினை பேசவோ அன்றி கற்றுக் கொள்ளவோ முன்வரும். தமிழை ஒரு

கற்பிக்கும் அவலநிலை தான் இங்கிருக்கின்றது.

அய்யர் மட்டும் தான் பூசை செய்ய முடியும். ஏனென்றால் அவர் உயர்ந்த சாதியில் பிறந்தவர் என்றும், நாங்கள் வெள்ளாளர் அவர்களிற்கு அடுத்த நிலையில் இருப்பவர்கள் என்றும் பிஞ்சு வயதிலேயே நஞ்சூட்டப்படுகின்றது. இதுவே கரையாரை விட பள்ளரை விட பறையர் குறைந்தவர்கள் என்றும் பள்ளரை விட பறையர் குறைந்த சாதியினர் என்னும் சங்கிலித் தொடராக நீள்கின்றது. மனிதத்தினை மண்ணில் போட்டு மிதித்துக் கொண்டு மனங்களில் சாதிவெறியை ஊட்டி மனிதர்களை ஒன்றுபட விடாமல் செய்து அதிகார வர்க்கத்தின் சுரண்டல்களை சுலபமாக செய்வதற்கு வழி செய்து கொடுக்கின்றது.

உயர்சாதிக் கொழுப்பை அதிகார வர்க்கத்தின் போலி வாழ்க்கையை எளிய உழைக்கும் மக்கள் தமக்கே உரித்தான கிண்டல் மொழியில் வெளிப்படுத்துவார்கள். அதன் ஒரு வெளிப்பாடு தான் "உடையார் உடலுறவு கொள்ளும் போது இடுப்பிலே சலங்கை கட்டிக் கொண்டு செய்தார்" என்பது. அவரது இடுப்பு அசைய அசைய மணிச் சத்தம் வெளியே வந்து அவர் ஒரு பிரதான வேலையாக இருக்கின்றார் என்பதனைச் சொல்லுமாம்.

ஒரு ஆணும் பெண்ணும் கூடும் போது குழந்தை பிறக்கும் என்று தான் உலகம் முழுக்க அறிந்து வைத்திருக்கின்றார்கள். உயர் சாதிக் குழந்தை பெற என்ன செய்ய வேண்டும். உடையார் இடுப்பினிலே சலங்கை கட்டிக் கொண்டு செய்தது போல இவர்கள் "அதிலே" எதையாவது கட்டிக் கொண்டு செய்வார்களாக்கும்.

"பறைச்சியாவது ஏதடா?. பணத்தியாவது ஏதடா?. இறைச்சி தோல் எலும்பிலும் இலக்கமிட்டு இருக்குதோ?. பறைச்சி போகம் வேறதோ?. பணத்தி போகம் வேறதோ? பணத்தி" பிராமணப் பெண். இது 18ம் நூற்றாண்டின் போது வாழ்ந்ததாக சொல்லப்படும் சிவவாக்கியர் எனும் சித்தரின் பாடல். 18ம் நூற்றாண்டில் நாடோடியாக சுற்றித் திரிந்த ஒரு மனிதனிற்கு இருந்த அறிவு இன்றைய நூற்றாண்டு மனிதர்களிற்கு இல்லாமல் போனது வெட்கித் தலை குனிய வைக்கின்றது.

வானம் தேன் சிந்தும் பொன்மாலைப் பொழுதுகளில் வண்ணம் மிகு நறுமலர்கள் பூத்துச் சொரிய காதல் கீதங்கள் தாலாட்டு பாடும் போது, ஊனாய்– உயிராய்–உள்ளொளியாய் ஒளிர்ந்த காதல் திருமணம் என்று வரும் போது சாதி, மதம் , அந்தஸ்து, பணம் என்ற சகதிகளில் சிக்கிக் கொள்வதேன். இருவர் மனம் ஒப்புதலே சேர்ந்து வாழ தேவையான அடிப்படை என்பது எம்மவருக்கு தெரியாமல் போவதேன்.?

# "வெல்வோம்–அதற்காக"

# மரணத்தின் வெளிகளில் வாழ்ந்த ஒரு போராளியின் பதிவுகள்!!

**தமிழ் தேசிய விடுதலைக்கான போராட்டத்தில், போராளியாகத் தன்னை இணைத்துக் கொண்ட கொண்ட தோழர் சீலனின் அனுபவங்கள் முன்னணி பதிப்பகத்தால் புத்தகமாக வெளியிடப்பட்டுள்ளது. இப் புத்தகம் வைகாசி மாதம் லண்டனில் வெளியிடப்படவுள்ளது. இங்கே தோழர் சீலன் "வெல்வோம்.. அதற்காக" அனுபவப்பதிவுக்கான பதிப்பகத்தின் முன்னுரை. புத்தகம் தேவையானோர் தொடர்பு கொள்ள :**
tamil_circle@yahoo.no

எண்பத்துமூன்று (1983) ஆடி இனக்கலவரம். இனவெறி அரசின் காடைத்தனம் கண்டு பொங்கி எழுகிறார்கள். இனி இது பொறுப்பதில்லை என்று ஆண்களும், பெண்களும் வீடுகளை விட்டு வீதிக்கு வருகிறார்கள். மக்களிற்காக, மண்ணிற்காக மரணத்தையும் எதிர்கொள்வோம் என்று அலை அலையாக எழுந்தார்கள். பெற்ற தாய், தந்தையரை விட்டு, காதலுக்குரியவர்களை விட்டு, கைக்குழந்தைகளைக் கூட விட்டு விட்டு இனி ஒரு விதி செய்வோம் என்று விண்ணதிர வந்தார்கள். பாசம் அறுத்து, நேசம் மறந்து, ஆசை துறந்து நம்தேசம் மீட்போம் என்று வெஞ்சமர் புரிய வந்தார்கள்.

சிங்கள பெருந்தேசியவாதிகளின் கொலைகளையும், சித்திரவதைகளையும் எதிர்த்து இயக்கங்களில் சேர்ந்தவர்களை அந்த இயக்கத்தலைவர்களே மரணத்தின் இருள்வெளிகளிற்கு மறுபடி தள்ளினார்கள். இயக்கத்தலைமைகளின் அராஜகத்தை, ஜனநாயக மறுப்பை எதிர்த்தவர்கள் கொல்லப்பட்டனர். மக்கள் போராட்டத்தை நம்பாமல் ஆயுதங்களையும், அந்நிய சக்திகளையும் சார்ந்திருப்பதை கேள்வி கேட்டவர்கள் சிறை வைக்கப்பட்டனர். இன்னொரு தமிழ் இயக்கத்தின் ஆதரவாளனாக, உளவாளியாக இருக்கலாம் என்ற ஒரு சிறு சந்தேகமே பல அப்பாவிகளின் உயிரைப் பறித்தது. எந்த உயிரினதும் ஆதார உணர்ச்சியான காதல் மனதில் மலர்ந்தது என்ற காரணத்திற்காகவே மண்ணிற்குள்ளே பலர் புதைக்கப்பட்டார்கள்

மனதில் தமிழ்மக்களின் விடுதலைக்கனல் கொழுந்து விட்டெரிய தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் சேரும் சீலன் ஆயுதப்பயிற்சிக்காக தமிழ்நாட்டிற்கு அனுப்பி வைக்கப்படுகிறார். பயிற்சி முகாமில் சித்திரவதைகளை கண்முன்னே காண்கிறார். பயிற்சிக்கு வந்த ஒருவரை உளவாளி என்று சந்தேகப்பட்டு சித்திரவதை செய்கிறார்கள். அவரது கையைக் கீறி அந்த வெட்டுக்காயத்திற்குள் வெடிமருந்தை நிரப்பி தீ வைக்கிறார்கள். தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் உமாமகேஸ்வரனுடன் சேர்ந்து லெபனானில் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் பயிற்சி எடுத்த விச்சு என்பவர் உமாமகேஸ்வரனுடன் முரண்பட்டதால் சீலன் இருந்த முகாமில் சிறை வைக்கப்படுகிறார். சிறையில் இருந்து தப்பி பட்டுக்கோட்டையில் ஒருபண்ணையார் வீட்டில் அடைக்கலம் புகுகிறார். விச்சுவை பிடிக்கப்போன உமாமகேஸ்வரனின் அடியாட்களை தடுத்த பண்ணையாரை சுட்டுக் கொல்கிறார்கள். தமக்கு தளமாக இருந்த தமிழ் நாட்டில் வைத்து தமிழ்நாட்டு குடிமகனையே சுட்டுக்கொல்லுமளவிற்கு அராஜகம் செய்கிறார்கள்.

அவரது இயல்பான நேர்மையும், தோழர் தங்கராசா போன்ற தோழர்கள் மூலம் கற்றுக் கொண்ட விடுதலை அரசியலான பொதுவுடமை தத்துவமும் அவரை சித்திரவதைகள், ஜனநாயக மறுப்பு போன்றவைகளிற்கு எதிராக போரிட வைக்கிறது. அவரும் அவரை ஒத்த கருத்து கொண்டவர்களும் சேர்ந்து அறிக்கை ஒன்றை தலைமைக்கு அனுப்பி வைக்கிறார்கள். அமைப்பிற்குள் ஜனநாயகம் வேண்டும். போராளிகளிற்கு அரசியல் கல்வி அளிக்கப்பட வேண்டும். அமைப்பின் தலைமை நீண்டகாலமாக தமிழ்நாட்டில் இருப்பதால் போராட்டத்திலிருந்தும், மக்களிடமிருந்தும் அன்னியப்பட்டிருப்பது குறித்து விவாதிக்கப்பட வேண்டும். ஒரு போராட்ட அமைப்பின் இராணுவப்பிரிவு அரசியல்மயப்படுத்தப்பட்டதாகவே இருக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை அந்த அறிக்கையில் வைக்கிறார்கள்.

"சகல அடக்குமுறைகளையும் உடைத்தெறிவொம்" என்பதை தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் கொள்கையாக சொல்லித் திரிந்த உமாமகேஸ்வரனும், அவரது அடியாட்களும் போராட்டத்தை அரசியல்மயப்படுத்த வேண்டும் என்றும், அமைபினுள் இருக்கும் அடக்குமுறைகளிற்கு தீர்வு காணப்பட வேண்டும் எழுந்த குரல்களை வன்முறை மூலம் அடக்க முற்பட்டார்கள். தம்முடன் முரண்பட்டவர்களை கொலை செய்வதை தான் போராட்டம் என்று சொல்லி வந்த கொலைகாரர்களாகத் தான் எல்லா இயக்கங்களும் இருந்தன. "மக்களிற்கு அரசியல், பேச்சுரிமைகளைக் கொடுத்தால் நாம் அரசியல் அநாதைகளாகி விடுவோம்" என்று அறிக்கை விடுமளவிற்கு "அரசியல் அறிவு" உள்ளவர்களாகவே இயக்கங்கள் இருந்தன.




ஆனால் அவர்கள் எதிர் கொண்ட வன்முறைகள் அவர்களை மேலும் மேலும் உறுதி கொண்டவர்களாக வளர்த்து விடுகிறது. மிக இளம் வயதில் சிறு அளவில் கற்றுக் கொண்ட அரசியல் கல்வியுடன் அவர்கள் போராடும் போது நீண்ட கால போராட்ட அனுபவமும் அரசியல் முதிர்ச்சியும் கொண்ட சில தோழர்கள் இயக்கத் தலைமைகளுடன் சேர்ந்து நின்றார்கள். சிலர் எந்தவித எதிர்ப்பையும் காட்டாது தாம் மட்டும் தப்பி போனார்கள் என்கின்ற விமர்சனத்தை சீலன் முன் வைக்கின்றார். அவர் சொல்வது போல சிலர் இருந்தார்கள். சில தோழர்கள் தம் உயிரிலும் மேலாக நேசித்த மக்களின் விடுதலையையும், தாம் கட்டி வளர்த்த போராட்ட அமைப்புகளையும் உடைவுகள் பலவீனப்படுத்தி விடும் என்று பயந்து எதிர்க்காமல் இருந்தனர். ஆனால் அவ்வாறு இருந்த மக்களிற்காகவே வாழ்ந்த பல போராளிகளும் கூட இந்த கொலைகாரர்களால் கொல்லப்பட்டனர்.

மக்களை நம்பாமல், சக தோழர்களை நம்பாமல், விடுதலையின் அரசியல் கல்வியான பொதுவுடமை தத்துவங்களை நம்பாமல் ஆயுதங்களையும், வெளிநாட்டு கொள்ளையர்களையும் நம்பியவர்கள் இறுதியில் தாங்களும் அழிந்து மக்களையும் பலி கொடுத்தார்கள். இவ்வளவு அழிவின் பின்பு கூட மறுபடியும் மற்றவர்கள் வந்து மக்களை மீட்பார்கள் என்று ஏமாற்றுகிறார்கள். இந்த நேரத்தில் சீலன் போன்றவர்களின் போராட்ட அனுபவங்கள் எமது போராட்டங்கள் எந்தப் பாதையில் போக வேண்டும் என்பதை தீர்மானிக்க உதவி செய்கின்றன. அவரது இந்த பதிவுகளில் முரண்பாடுகள் இருக்கலாம். சில நகர்வுகளை வேறு விதமாக எடுத்திருக்கலாம் என்று தோன்றலாம். சில தோழர்களைப் பற்றிய விமர்சனங்களிற்கு வேறு பக்கங்களும் இருக்கக்கூடும். ஆனால் அவரது பதிவுகளும், அவர் போன்ற மக்களை நேசித்த தோழர்களின் பதிவுகளும் தமிழ்மக்களின் வருங்காலம் செல்ல வேண்டிய திசையை காட்டி நிற்கின்றன.

இயக்கங்களால் செய்யப்பட்ட கொலைகளும், சித்திரவதைகளும் தமிழ்மக்களின் வரலாற்றில் வெட்கித் தலை குனிய வைக்கும் பக்கங்கள். ஆனால் இந்த கொலையாளிகளிற்கு அஞ்சாமல் சீலன் போன்ற போராளிகள் எல்லா இயக்கங்களிலும் இருந்தார்கள். அராஜகங்களை எதிர்த்து குரல் கொடுத்தார்கள். மரணம் வரும் என்று தெரிந்தும் போராட்டத்தில் உறுதியோடு நின்றார்கள். அந்தக் குரல்களின், போராட்டங்களின் தொடர்ச்சியாகத் தான் இலங்கையின் இன்றைய இருள்வெளிகளிற்குள்ளும் மின்மினியின் மினுங்கலாய் என்றாலும் விளக்குகள் எரிகின்றன. கல் நிறைந்த பாதையில் கால்கள் களைத்தாலும் காற்றில் அசைந்தாடும் செங்கொடிகளை கைகள் ஏந்தியிருக்கின்றன. குரல்வளைகளை நெரிக்கும் கரங்களை மீறி நட்சத்திரங்களை வாரி இறைக்கும் வானம் எங்கும் எழுகிறது விடுதலையின் பாடல்.





படிப்பகம்

முற்குறிப்பு:

ஜனனி செல்லத்துரையுடனான இந்தப் பேட்டி 2011 புரட்டாதி மாத ஆரம்பத்தில் எடுக்கப்பட்டு ,முன்னணி இதழில் வெளியிடப்பட்டது. தற்போது சூழலின் தேவையுடன் மறு பிரசுரம் செய்யப்படுகின்றது. அத்துடன் அவரின் பெயர் மற்றும் தனிப்பட்ட விபரங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

–எல்லாத்தையும், எல்லோரையும் நடுத்தெருவில கொண்டு வந்து விட்டதற்கு, உங்கள மாதிரி புலம் பெயர்ந்தவர்கள் தான் காரணம். இப்போ வந்து முதலைக் கண்ணீர் விடுகிறதில எந்த லாபமும் இல்லை. அதாவது எந்த லாபமும் மக்களுக்கு இல்லை.

– பாசிசம், பிற்போக்குத் தேசியம் என்றெல்லாம் சொல்லி எம் தேசம் அழிந்துள்ள இன்றைய நிலைமைக்கு காரணம் கூற முயற்சிக்கிறீர்களே, அன்றிலிருந்து வைகாசி 2009 வரையான காலத்தில், நான் களத்தில் நின்றேன். இப்போ திரும்பவும் யாழ்– பல்கலைக் கழகத்தில் சமூகவியல் முதுமாணி கற்கையை தொடர்கின்றேன்.

– இதில் நான் இருந்த இயக்கம் பற்றி, அது ஏன் தோற்றது, அதைவிட ஈழவிடுதலைப்போராட்டம் ஏன் தோற்றது, போன்ற அரசியல் ரீதியான கேள்விகளும், எமது போராட்டத்தின் ஆரம்பத்திலிருந்து வைகாசிமாத இறுதி நாட்கள்வரை நடந்த விடயங்கள் எவ்வாறு தமிழ் இனத்தை சமூக, கலாசார, பொருளாதார ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன? என்பது போன்ற ஆயிரம் கேள்விகள்.., இக் கேள்விகளுக்கு பதில் காண வேண்டிய தேவை எனக்கும் எம் சமூகத்திற்கும் முன்னுள்ள மிக முக்கிய விடயம். ஆனால் ஒரு தனி மனிதமாக நானோ, எனது ஒட்டுமொத்த தமிழ் சமுதாயமோ இக் கேள்விகளுக்கான பதிலை தேடும் மன நிலையிலோ அல்லது சூழ்நிலையிலோ உதாரணமாக பிரேமச்சந்திரன் போன்றவர்களுக்கும் மஹிந்த குடும்பத்துக்கும் மிக நெருக்கமான உறவு உள்ளது என்பது எல்லாருக்கும் தெரிஞ்ச விசயந்தானே.

இப்போ யாழ்ப்பாணத்தில் கட்டிட ஒப்பந்தம் பெறுதல், கொட்டல் மற்றும் மது விற்பனைக்கான அனுமதி பெறுதல் போன்ற அரசு சார்ந்த விடயங்களுக்கு, மஹிந்த குடும்பத்துடனான உறவு வெகுவாக பாவிக்கப்படுகிறது.

இன்று யாழ்பாணத்தில் உள்ள பல நிறுவனங்கள், தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் – இந்நாள் பாராளுமன்ற உறுப்பினர்களினது தான். அவர்களின் பினாமிகளாலும், ஊறவினர்களாலும் அந்த நிறுவனங்கள் நிருவகிக்கப்படுகிறது. அதேவேளை

# ..எதிர்காலத்திற்கான போராட்டம் ஏதோ ஒருவகையில் தொடரும் என்பது எனது நம்பிக்கை...”

நீங்க பாசிசம் என சொல்லுற அமைப்பை விட பல பத்து மடங்கு அதிகாமானவர்கள், அதை விமர்சிப்பவர்களாக இருந்தீங்க. அப்போ, ஏன் அதற்கு எதிராக மக்களை அணி திரட்டாமல் நாட்டை விட்டு ஓடுனீர்கள்?

முன்னணிக்காக கேள்வி கேட்டு பேட்டிகாணவும், உரையாடவும் வந்த என்னிடமே கேள்விக் கணைகளை தொடுத்தார் ஜனனி செல்லத்துரை.

ஜனனியை 2004 ஆம் ஆண்டில் நான் முதன் முதலாக சந்தித்தேன். சந்தித்த இடம் யாழ்ப்பாணப் பல்கலைகழகம். அன்று அவர் சமூகவியல் முதலாம் வருட மாணவி. நான் அப்போது "வடபகுதி தமிழ் இளையோரும் தற்கொலையும்" என்ற தலைப்பில் கள ஆய்வுப் பணியை, யாழ்ப்பாணத்தில் மேற்கொண்டேன். அந்த ஆய்வுப் பணியின் ஒரு பகுதியாக வர்க்கம், பால், மதம் போன்ற சமூகப் பிரிவுகளை பிரதிநிதித்துவப் படுத்தவல்ல இளையோரை, தற்கொலை பற்றி தயாரித்து வைத்திருந்த கேள்விகளின் அடிப்படையில் பேட்டி கண்டேன். அவ்வாறு பேட்டிகண்டவர்களில் ஒருவர்தான் இந்த ஜனனி.

உங்களை நான் கடைசியாக 2004இல் சந்தித்ததற்கும் இன்று உங்ககளை சந்திப்பதற்கும் இடையில் ஆறு ஆண்டுகள் கடந்துள்ளன. இந்தக் கால இடைவெளியில் அரசியல், சமூகம் மற்றும் உங்களின் தனிப்பட்ட வாழ்க்கை என, அனைத்து மட்டங்களிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும். அவைபற்றி... என் கேள்வி முடிவதற்குள் அதற்கான பதில் கரைகடந்த அலையாக பிரவாகித்தது.

– எங்கிருந்து ஆரம்பிக்கிறது? நீங்க சொல்லுறமாதிரி அரசியல், சமூகம், தனிப்பட்ட வாழ்க்கை என்று பிரித்துப் பார்த்து பதில் சொல்லுறது இலகுவாக இருந்தாலும், எனது வயதுடயோரின் வாழ்நிலையில், இந்த மூன்று நிலைகளையும் பிரித்துப் பார்த்து பதில் சொல்வது இலகுவானதல்ல.

உங்களுக்கு தெரியும் நாங்கள் யுத்தகாலத்தில் பிறந்து, யுத்தத்தின் அனைத்து கொடுமைகளுக்கிடையிலும், அரசியல் அநீதிகளுக்கு மத்தியிலும் வளர்ந்தவர்கள். யுத்தம் நிகழும் ஓர் சமூகத்தில் தனி மனிதத்தின் விருப்பு வெறுப்பின் அடிப்படையின் அதன் சீவியம் கட்டமைக்கப்படுவதில்லை.

யுத்தமில்லாச் சமூகத்தில், மட்டுப்படுதப்பட்ட நிலையிலுள்ள தனி மனிதருக்கிருக்கும் தெரிவுகள், எமக்கு எம் வாழ்நாளில் இருந்ததில்லை. அரசியல் தலைமைகளின் முடிவுகளும், யுத்த தந்துரோபாயங்களும் அவைகளின்பார்ப்பட்ட விளைவுகளுமே எமது வாழ்கையை, அதன் திசையை முடிவுசெய்யும் சக்திகளாகயிருந்தது. இன்றும் இருக்கிறது. உங்களை சந்தித்த பின்னான காலத்தில் நான் சமூகவியலில் இளம் கலை படித்து முடித்து விட்டு 2007இல் முதுகலை கற்கையை தொடங்கினேன்.

ஆனால் அன்றிருந்த சூழலில் பல்கலைகழகம் ஒழுங்காக இயங்கவில்லை. எனது சக மாணவர்கள் பலர் கொழும்புக்கும், வெளிநாடுகளுக்கும் புலம்பெயர்ந்தனர். சிலர் அந்த சூழ்நிலையிலும் தமது கல்வியை தொடர்ந்தனர். என்னப்போன்ற சிலர் வன்னிக்கு சென்று புலிகளுடன் இணைத்துகொண்டோம். இல்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை.

அதேவேளை ஆரம்பத்தில் நான் கூறியது போல, எல்லாத்தையும் நடுத்தெருவில விட்டிட்டு தப்பியோடியவர்கள், இப்போ புலத்திலிருந்தபடி ஈழவிடுதலைப் போராட்டம் ஏன் தோற்றது? புலி எந்த வர்க்கத்தைச் சேர்ந்தது? பாசிசமா, அல்லது தேசியமா புலிகளின் அரசியல் குணாம்சம் என்ன? போன்ற கேள்விகளுக்கு விளக்குப் பிடித்து பதில் தேடுவதாக நடித்தபடி, அவர்கள் ஏற்கனவே பாடிய அதே மந்திரங்களையே பாடுகிறார்கள்.

இது ஒரு பக்கமிருக்க, புலிகளுக்கு ஆதரவாக இருந்தவர்கள் எந்தவித சுய சிந்தனையோ, தேடலோ இன்றி தவறுகளை மூடிமறைத்தபடி, தமது இருப்பை காப்பற்ற எமது தோல்விக்கான காரணங்களென ஏதேதோ கூறுகிறார்கள்.

சர்வதேச அரசியல் காரணிகளும், காட்டிக் கொடுப்புகளும் தான் தோல்விக்கு காரணம் என கதை விடுகிறார்கள். என்னைப் பொறுத்தவளவில் இவ்விரு கும்பலும் சுயநலம் பிடித்த, தப்பியோடிய யாழ் மேலாதிக்க சமூகத்தின் பிரதிநிதிகளே. இவர்களின் அரசியல் முனைப்புகளும், அரசியல் ஆய்வுகளும் எமக்கு இழந்த எதையும் மீட்டுத் தரப்போவதில்லை.

தொடர்ந்தும் நாம் தான் போராடவேண்டும்.
பதிலில் ஆத்திரமும் கோபமும் மிதமாகவிருந்தது.

2004இல் சந்தித்தபோது எனது மிக நீண்ட கேள்விகளுக்கு ஓரிரு வார்த்தைகளில் வேண்டா வெறுப்பாக தாழ்ந்த குரலில் பதில் சொன்ன ஜனனிக்கும், இன்று கேள்வி கேட்டு முடிக்கு முன்பே பல கோணங்களில் வரையறுத்து, துல்லியமான குரலில் அதற்கான நீண்ட பதிலை வழங்கும் ஜனனிக்கும் உள்ள வித்தியாசம் ஒருவகை ஆச்சரியத்தையும், சிறு நம்பிக்கையையும் என்னுள் ஏற்படுத்தியது.

அதேவேளை அவரின் பதில்களில் செறிந்திருந்த ஆத்திரத்தினதும் கோபத்தினதும் பின்னணியில், கையறு நிலையில் உருவாகும் சோகம் மிகவாக இழையோடியது. இரு சந்தர்பங்களில் உணர்சிவசப்பட்ட அவரின் குரல் உயர்ந்த போது, அவருடன் கூட வந்த சக மாணவி அவரை ஆசுவாசப்படுத்தி சகச நிலைக்கு கொண்டுவந்தார்.

உங்கள் பதிலில் உள்ள உள்ளடக்கத்தை நேரடியாகவும் மறைமுகமாகவும் என்னால் விளங்கிக்கொள்ள முடிகிறது. ஆனால் அரசியல் அடிப்படையில் முற்றுமுழுதாக என்னால் உங்களுடன் உடன்பட முடியவில்லை என என் கருத்தை பதிவு செய்தபடி வட பிரதேசத்தின் இன்றைய நிலை பற்றி அவரிடம் கருத்துக்கேட்டேன்.

– இன்றைய வடபகுதி நிலை பற்றி கேட்டீர்கள். இந்த கேட்விக்கும் சும்மா மேலோட்டமாக பதில் சொல்ல முடியாது.

புலிகளின் அழிவின் பின்பு இங்கு அரசியலில் இரு துருவங்கள் இருப்பதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு மக்களுக்கு சொல்லியபடி, தமிழ் மக்களின் ஏகபோக தலைவர்கள் தாங்கள் தான் எனவும், அரசு உட்பட மாற்றுக் கட்சிகள், அரசியல் முயற்சிகள் அனைத்தும் தமிழ் மக்களுக்கு எதிரானவை என "ரீல்" விட்டபடி அரசியல் செய்கிறார்கள். இவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பெரும்பான்மையான தமிழ் ஊடகங்களும் இதே கருத்தையே பிரச்சாரம் செய்கின்றன. ஆனால் எல்லோருக்கும் தெரியும், கூட்டமைப்பு அரசியல்வாதிகள் பலருக்கு இலங்கை அரசுடனும், அதில் உள்ள மந்திரிகளுடனும் பின் கதவால் நல்ல உறவுண்டு எண்டது. அரசினதும் மக்களினதும் பிரதிநிதி தான் தான் என்பதுபோல இங்க ஒருவர் வில்லன் அரசியல் வேற செய்யிறார். நான் யாரைப் பற்றிச் சொல்லுறன் எண்டது உங்களுக்கு விளங்கும். ஆம் டக்லஸ் பற்றித்தான் சொல்லுறன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தனியார் நிறுவனங்களையும், வடபகுதியின் பொருளாதாரத்தையும் தாங்கள் தான் கட்டுப்பாடில் வைத்திருப்பது போல, இந்த இரு கூட்டுக் கும்பலும், அரச நிறுவனங்களை தமது கட்டுப்பாட்டில் வைச்சிருக்கினம்.

இங்குள்ள அரச நிறுவனங்களில் ஒரு சிற்றூளியர் வேலை பெறுவதெண்டாலும் டக்லஸ் கும்பலின் தயவு தேவை. உதாரணமா இங்கு பல்கலைக் கழகத்தில் பணம், பதவி சார்ந்த அனைத்து விடயங்களும் நூனீ யின் அடிவருடிகளாலேயே கட்டுப்படுதப்படுகிறது. பல்கலைக் கழகத்தில் அரசினால் நியமிக்கப்பட்ட துணை வேந்தரின் அதிகாரங்கள், நடைமுறையில் இங்குள்ள நூனீ ஆதரவாளர்களான சில முன்னாள் துணை வேந்தர்களினாலேயே பிரயோகிக்கப்படுகிறது. அதைவிட இந்த முறை யாரைத் துணை வேந்தராக நியமிப்பதெண்ட முடிவை எடுத்து, அதை நடை முறைப்படுத்தியது நூனீதானே? கல்வி கற்றவர்கள் நிறைந்துள்ள ஓர் நிறுவனமான யாழ்பாண பல்கலைக் கழகத்திலேயே இப்படி எண்டால்.., இங்குள்ள மற்ற அரச நிறுவனங்களின் நிலைமை எப்படி இருக்குமென எண்ணிப்பாருங்கோவன்.!

என்ன இருந்தாலும், இப்போதுள்ள துணைவேந்தர் பெண்ணென்பது பெருமைப்பட வேண்டிய விடயந்தானே? அதேபோன்று இன்று யாழ்ப்பான மாவட்டத்தில் பெண்கள் அரசுசார் நிறுவனங்களிலும், அரசியல் பொறுப்புகளிலும் உள்ளனர்.

குறிப்பாக யாழ்பாண மாவட்ட அரச அதிபர், மற்றும் அரசியலில் யாழ்பாண மேயர், ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி.மகேஸ்வரன் போன்றவர்களை குறிப்பிடலாம். இவ்வாறு பெண்கள் பதவிக்கு வருவது பெண்ணிய முன்னேற்றமில்லையா?

நீங்கள் இதை எப்படிப் பார்க்கிறீயள்?

– என்னடா இவ்வளவு நேரமும் பெண்கள் பற்றி இவர் கேள்வி கேட்கவில்லேயே என்று நினைத்துக் கொன்டிருந்தேன். மறக்காமல் கேட்டதற்கு நன்றி.

முதலில் இன்று தமிழ் பிரதேசத்தில் பெண்களின் நிலை பற்றி கொஞ்சம் சொல்லிவிட்டு, பிறகு நீங்கள் கேட்ட "பெண்ணிய" கேள்விகளுக்கு பதில் சொல்லுறன்.

பெண்களின் கல்வி நிலையை எடுத்துக்கொண்டால், அது நான் பிறப்பதற்கு முன்பு, எண்பதுகளில் இருந்த நிலைமையை விட படு மோசமாகவுள்ளது. இப்போ ஆரம்பக் கல்வியிலும் உயர் கல்விக்கு முன்பான A /L வரையான கல்வியிலும், பெண்கள் தொகை ஆண்களை விட அதிகம். அதேவேளை நூற்றுக்கு முப்பது வீதமான மாணவிகள் கல்வியை இடையிலேயே நிறுத்திக்கொள்கிறர்கள். அதையும் மீறி கல்வியை தொடர்பவர்களில் பத்து வீதத்தினரே உயர் கல்விக்குள் நுழைகின்றனர்.

தொடாச்சி 15 பக்கத்தில்



படிப்பகம்

5 மக்க தொடர்ச்சி

### வணிக முத்திரையா, மனித அடையாளம்

முரண்பாட்டையே, பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் வணிக முத்திரை(மாாக்) மூலம் முதன்மையாக்கி வருகின்றது. இந்த வணிக முத்திரையைக் கொண்டு மனிதனை மதிப்பீடும் புதிய பண்பாடானது, உலகமயமாக்களுடன் வீரியம் பெற்று, முதன்மையான சமூகத்தின் பண்புக் கூறாக மாறியது.

இதனால் பன்னாட்டு வணிக முத்திரை கொண்ட பொருட்கள் சந்தையில் குவிந்து விட்ட நிலையில், அதை எல்லோரும் நுகரும் நிலையானது, வணிக முத்திரைக்குரிய முந்தைய அதன் பொது சமூக அந்தஸ்தை இழந்து விடுவது நடந்தேறுகின்றது.

இது சந்தையில் தேக்கத்தை உருவாக்கி விடுகின்றது. இந்த முரண்பாட்டை நீக்க, பொருளை வணிக முத்திரை கொண்ட பொருளை வக்கிரமாக்கின்றது. அதாவது ஒரு வணிக முத்திரை கொண்ட பொருளில், ஏற்றத்தாழ்வான பொருளை வர்க்க ரீதியாக உருவாக்கிவிடுகின்றனர்.

மனிதனின் வர்க்க ஏற்றதாழ்வுக்கு ஏற்றால் போல், ஒரே வணிக முத்திரை கொண்ட பொருளில் ஏற்றதாழ்வான பொருட் சந்தையாக சந்தை மாற்றப்பட்டு விடுகின்றது. மனிதனின் ஏற்றத் தாழ்வுக்கு ஏற்ப, பொருள் உற்பத்தியாக இன்றைய உலகம் மாறி வருகின்றது.

### வணிக முத்திரையிலான வஉக்க உற்பத்தியும், அதன் விளைவுகளும்

பொருளை பின்தள்ளி வணிக முத்திரையை முதன்மையாக்கி நுகர்வுச் சந்தை கட்டமைத்தன் மூலம், வணிக முத்திரையை சர்வதேச மயப்படுத்தியது. உலகம் பன்னாட்டு வணிக முத்திரை கொண்ட உற்பத்திகளின் ஆதிக்கமாக உலகம் மாறியது.

பன்னாட்டு வணிக முத்திரை கொண்ட பொருளை நுகர்வதே தரமானது, அழகானது, கௌரவமானது என்ற சமூக பொது உளவியல், பிற பொருட்களை சந்தையில் இருந்து அகற்றி விடுகின்றது.

இது சர்வதேச மூலதனத்தை அடிப்படையாகக் கொண்ட வணிக முத்திரை கொண்டிராத பொருட்களின் நுகர்வை, சந்தையில் இருந்து அகற்றி விடுகின்றது. வணிக முத்திரை இல்லாத பொருட்கள் சந்தையில் தேங்கி, அதன் உற்பத்தியை முடங்கி விடுகின்றது. பன்னாட்டு வணிக முத்திரையற்ற பொருள் சந்தையில் அருகி, இதன் உற்பத்தியான விலை கூடியதாகவும் விற்க முடியாத பொருளாகவும் மாறிவிடுகின்றது.

இப்படி வணிக முத்திரையானது சர்வதேச தகுதி பெற்றதாகிவிடும் போது, பொருளின் தரமென்பதல்ல மாறாக பன்னாட்டு மூலதனத்தைக் கொண்டு இருக்கும் பொருள் தகுதியானது என்ற பொது கருத்தை உருவாக்கி விடுகின்றது. தேசிய சிறு மூலதனங்கள் சர்வதேச வணிக முத்திரை கொண்ட பொருளை வாங்கி விற்கும் தரகுகளாக மாற்றி, அதை அடையாளமற்றதாக்கி அழித்து விடுகின்றது.

இதனால் இன்று சர்வதேச தகுதி கொண்ட வணிக முத்திரை அல்லாத பொருட்கள் நுகர்வோர் இன்றி, விலை அதிகரித்த பொருளாக மாறிவிடுகின்றது. சந்தையில் வணிக முத்திரை இல்லாத பொருட்கள் பொதுவாக அருகி வருகின்றது.



கடந்தகால தேசியவாத பொது மதிப்பீடுகளும், அதன் அடிப்படையலான பொது உளவியலும் காணாமல் போகின்றது. பழைய எதிர்நிலை போராட்டங்களும், தந்திர உபாயங்களும் தேக்கத்துக்கு முடக்கத்துக்கும் உள்ளாகின்றது.

உதாரணமாக சர்வதேச வணிக அடையாளப் (மார்க்) பொருளை பகிஸ்கரிக்கும், கடந்தகால தேசியவாதக் கொள்கைகள் வரட்டுத்தனமானமாக மாற்றி விடுகின்றது. வணிக முத்தரையில்லாத பொருளைக் கொண்ட வாழ்கை என்பது, கற்பனையானதாகவும் அதிக வாழ்கைச் செலவு கொண்டதாகவும் மாறிவிடுகின்றது. விலை குறைந்த பொருளை நுகரத் தகுதியான மனிதன், விலை கூடிய மார்க் அல்லாத பொருளை நுகர முடியாதவனாக மாறும் போது, □மார்க் பகிஸ்கரிப்பை□ போராட்டமாக கொள்ளுதல் வரட்டுவாதமாகவும் இறுதியில் போராட்டத்தில் இருந்து தனிமனிதனை தனிமைப்படுத்தி அகற்றி விடுகின்றது. உலகமயமாதல் சந்தையின் விரிவாக்கத்தை, தேசியவாத உற்பத்திகள் மூலம் தடுத்து நிறுத்த முடியாத எதார்த்தத்தின் பொது விளைவும் உண்மையுமாகும்.

### மனிதன் விலங்கல்ல, சிந்திக்கும் சமூக உயிரி

இவை எதுவும் மனிதனின் தெரிவல்ல என்பதால், இது முரண் கூறாகவும், மகிழ்ச்சியற்ற ஒன்றாகவும் மாறிவிடுகின்றது. வர்க்க ரீதியாக பொருளை அடையக் கோரும் உளவியலும், அதற்காக இயந்திரதரமான வாழ்க்கையும், மனிதனை தன்னில் இருந்து அன்னியப்படுத்தி விடுகின்றது. இது மீண்டும் மனித இயல்புக்குள் வாழத் தூண்டுகின்றது. அதைத் தடுக்கத்தான் இன்றைய(உலக) சட்டங்களும் அதை பாதுகாக்கும் அரசுகளின் செயற்பாடுகளும் மக்களுக்கு எதிரானதாக கூர்மையடைந்து வருகின்றது. உலகமயமாதலுக்கு எதிரான மக்களின் போராட்டத்தின் எதிர்நிலைப் பலத்தைக் எடுத்துக் காட்டுகின்றது.

14 பக்கம் தொடர்ச்சி **"..எதிர்காலத்திற்கான போராட்டம் ஏதோ ஒருவகையில் தொடரும் என்பது எனது நம்பிக்கை..."**

இவர்களில் பெரும்பான்மையானோர் திருமணம், வெளிநாடு போதல் போன்ற காரனிகளால் கல்வியை இடையில் நிறுத்துகிறார்கள். இதில் பலர் கல்வியை நிறைவு செய்தாலும், எந்தவித தொழிலிலும் ஈடுபடுவதில்லை. மிக சிறு வீதத்தினரே கல்வித் தகமையின் அடிப்படையில் ஏதாவது வேலையில் இணைகின்றனர். இந் நிலைக்கு யுத்தம், மற்றும் "சிங்கள அரசுகளால் எமது கல்விசார் உட்கட்டமைப்பு அபிவிருத்தி செய்யப்படவில்லை" என்பது போன்ற காரணிகள் மட்டும் காரணம் என்று மேலோட்டமாக சொல்லிவிட முடியாது. பொருளாதார வறுமை கவனத்தில் எடுக்கப் படாத பெண்களின் ஊடலுளவியல் பாதிப்புகளும் வேதனைகளும், வெளிநாட்டு பொருளாதராத்தில் தங்கியிருக்கும் நிலை இறுக்கமடைதுள்ள ஆணாதிக்க சிந்தனை, வெளிநாடு போகும் கனவு போன்ற எமது சமூகத்தின் உள்ளார்ந்த காரணிகளும், பெண்கள் கல்வியில் சோபிக்க முடியாதற்கான அடிப்படைகளாகும்.

சிங்களப் பிரதேசங்களை பார்த்தீர்களானால், அங்குள்ள சில பெரு நகரங்களுக்கு வெளியில் கல்விசார் உட்கட்டமைப்பு பெரிய அளவில் அபிவிருத்தி செய்யப்படவில்லை. அப்பகுதிகளும் இருபது வருடங்களுக்கு மேலான யுத்த பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால் அப்பகுதிகளில் பெண்களின் உயர்கல்விப் பங்கெடுப்பும், தொழில் ஈடுபாடும் அதிகரித்துள்ளது. சிங்கள சமூகத்தில் பரந்துபட்ட அளவில் பெண்களுக்கான கல்வி, அவர்களை வறுமையிலிருந்து வெளியேற உதவும் ஏணியாக கருதும் நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு உணரும் நிலை, எமது சமூதாயத்திலும் வரவேண்டும். அந்நிலை வரும்போது, பெண்களின் வாழ்வாதாரம் வலுவடைய வாய்ப்புள்ளது. கல்விதான் பெண் விடுதலைக்கான அடித்தளம் என்பது எனது ஆணித்தரமான நம்பிக்கை.

– இதை விடுத்தது இரண்டு அல்லது மூண்று பெண்கள் உயர் பதவிக்கு வந்தார்கள் என்பதை பெண் விடுதலையின் அறிகுறியாக காட்ட நினைப்பது அடி முட்டாட்தனம். இவர்களின் பதவிகளை அனைத்து பெண்களின் விடுதலைக்கான முனைப்பாக காட்ட முயல்வதும், நினைப்பதும் கூட ஆணாதிகத்தின் வெளிப்பாடுதான்..., அப்படியானால் இலங்கைதான் உலகத்தில் முதல் பெண் பிரதமரை உருவாக்கியது. அதேபோன்று இந்தியா இந்திராகாந்தியை உருவாக்கியது. அதன் அடிப்படையில் குறைந்தது இந்திய, இலங்கைப் பெண்களினது அரசியல் பிரதிநிதித்துவமாவது இந்நாடுகளில் உயர்ந்திருக்க வேண்டுமே? மேற்தட்டு வர்க்கப் பெண்கள் பதவிக்கு வருவது, சமூதாய கட்டுமானகளையும், கருத்தியலையும் உடைத்து அல்ல. பெண்களுக்கு எதிரான சமூகக் கட்டுமானங்கள் உடையாதவரை, இந்தமாதிரி பெண்கள் பதவிக்கு வருவது வெறும் குறியீட்டு அரசியலே ஒழிய வேறோண்டுமில்லை.

இதைவிட மிக முக்கியமானதொரு விடயம், நான் இங்கு சொல்லவேணும். மேற்படி யாழ்ப்பாணப் பெண்கள் பதவிக்கு வந்தபின்பு, யாழ்ப்பாணத்தின் கலாச்சாரம் பாதிகப்படுகிறது, விபச்சாரம் நடக்கிறது, கருக்கலைப்பு நடக்கிறது என அறிக்கை விட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இதில் குறிப்பாக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் தரவுகளுடனும், வரைவுகளுடனும் அறிக்கை விடுகிறார். இவர் விடுகின்ற அறிக்கைகளை பார்த்தீர்களானால் இங்கு நடக்கும் அனைத்து சமூக அவலங்களுக்கும், சீரழிவுகளுக்கும் பெண்களே காரணம் என நேரடியாகவும் மறைமுகமாகவும் குறிப்பிட்டிருப்பார். உண்மையில் என்ன நடக்கிறது. முன்பு கிராங்களுக்கு அழைத்துக் கொண்டுபோய் "கைவைத்தியம்" செய்து கருக்கலைப்புகள் செய்தார்கள். பணவசதி உள்ளவர்கள் சில ரகசிய வைத்தியர்களிடம் அதனைச் செய்து கொண்டார்கள். யுத்தத்தின் பின்பு, இந்த ரகசியக் கட்டமைப்புகளும் கைவைத்திய முறைகளும் அழிந்து விட்டது. இப்போ அரசாங்க வைத்தியசாலையில் அல்லது தனியார் மருத்துவமனையில் கருகலைப்பு செய்யும் நிலைமை உள்ளது. இதனால் இன்று கருகலைப்பு செய்வோர் தொகை பதிவு செய்யப்படுகிறது. இந்த தகவல்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு, இப்போது தான் தமிழ்க் காலாசாரம் பாதிக்கப்பட்டது போல பிரசாரம் செய்வது என்ன நியாயம்.!?

இவர்களுக்கு உண்மையிலேயே பெண்கள் முன்னேரத்தில் கவனமிருந்தால், பெண்களின் சுய விருப்பிலான பாலியல் உறவுகொள்ளும் உரிமைக்காக குரல்கொடுக்க வேண்டும். அத்தோடு இவர்களுக்குள்ள பதவிகளை பாவித்து பாலியல் விழிப்புணர்வை சமூகத்தில் உருவாக்க இவர்கள் வழிசெய்ய வேண்டும். இதை விடுத்து தம்மை கலாச்சாரக் கண்ணகிகளாக இவர்கள் கட்டமுனைவது வெறும் அரசியல் விபச்சாரமே..!

நீங்கள் சொல்வதில் பெரும்பானமையான விடயத்தில் என்னால் உடன்பட முடியும். ஆனாலும் நீங்கள் இப்போதும் புலி அரசியற் கருத்தியலில் நின்று கதைக்கின்றீர்களோ என்பது போன்ற ஐயம் எனக்குள் எழுகிறது.

புலம் பெயர்நாடுகளில் இலங்கை தமிழ் பெண்களை தூற்றுவதும், அவதூறு வெளியிடுவதும் புலிகள் சார்ந்த ஊடகங்கள் தான். குறிப்பாக இளம் பெண்கள் கைத் தொலைபேசிக்காகவும், உடுபுடவைக்காகவும் இராணுவத்துடன் விபச்சாரம் செய்வதாக எழுதுகிறார்கள். முன்னாள் பெண் போராளிகள் மற்றும் வன்னியை சேர்ந்த பெண்கள் இப்படி விபச்சாரத்தில் ஈடுபடுவதாக இவர்கள் பிரச்சாரம் செய்கிறார்கள்.

– இதற்கான பதிலும், நான் கருகலைப்பு சம்பந்தமாக சொன்னது போலத்தான். இன்றுள்ள சமூக சூழலில் விபச்சாரம் போன்ற சீரழிவுகளை தவிர்க்கமுடியாது. ஆனால் அதை இப்போதுதான் புதிதாக எம் சமூகத்தில் நடப்பதாகவும், அது அதிகரிதுள்ளதாகவும் சொல்ல முனைவது வெறும் அரசியல் பித்தலாட்டம். அதை புலிகள் செய்தாலென்ன, உங்களுடன் சேர்ந்த பெண்ணியவாதிகள் செய்தாலென்ன. அடிப்படையில் இவ்வாறு கதை பரப்புவது தவறு. பத்துக்கும், பதினையாயிரத்துக்கும் இடையில் சம்பளம் வாங்கும் ஒரு இராணுவத்தினர், மூவாயிரம் – நாலாயிரம் செலவழித்து மொபில் டெலிபோன் கொடுத்து, தமிழ்ப் பெண்களை வல்லுறவு செய்கிறார்கள் என்பது வெறும் அபத்தம். ஒன்று இரண்டு சந்தர்பங்களில் அவ்வாறு நடந்திருக்கலாம். ஆனால் அச் சம்பவங்களை ஒட்டுமொத்த வடபகுதி இளம் பெண்களை விபச்சாரிகள் என்று சொல்வதற்கு ஆதரமாக பயன்படுத்த முடியாது. இப்படியான பிரச்சாரங்கள் அரசுக்கும் இராணுவத்திற்கும் எதிராக நடத்துவதாக எம்மவர் பலர் நினைத்தாலும், நீண்ட காலப்போக்கில் பாதிக்கப்படப்போவது நமது சமுதாயம் தான் என்பதை நாம் மறுக்க முடியாது.

இவ்வளவு விபரமாக் கதைக்கும் நீங்கள், நான் கேட்ட ஒரு கேள்விக்கு இன்னும் பதில் சொல்லவில்லை. அதாவது உங்களின் ஊரையாடலில் மறைந்திருக்கும் புலியரசியல்..?

– உங்கள் கேள்வியில் ஒரு நியாயம் இருக்கு என்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் நான் ஆரம்பத்தில் சொன்னதுபோல நானும், என்னைப்போன்று ஒட்டுமொத்த தமிழ் சமூகமும், நாம் பட்ட காயத்தை ஆற்றும் முயற்சியிலேயே இன்றும் உள்ளோம். நாம் கடந்த காலத்தை ஆய்வு செய்யும் நிலைக்கு இன்னும் வரவில்லை. வெளி நாட்டில் உள்ள உங்களைப் போன்றவர்கள் (நீங்கள்) வேண்டுமானால் சாப்பிட்ட சாப்பாடு சமிபாடடைய புளிச்சேவறையான முடிவுகளுக்கு வரலாம். அது உங்கள் தெரிவு. அதை எம்மிடமிருந்து எதிர்பார்ப்பது வெறும் அறிவு மேலதிக்க வன்முறை. இன்றுள்ள ஸ்தம்பித நிலை மிக விரைவில் மாறும்.., அப்போ எதிர்காலத்திற்கான போராட்டம் எதோ.., ஒருவகையில் அது தொடரும் என்பது எனது நம்பிக்கை.

நம்பிக்கை என்ற வார்த்தையை ஜனனி சொல்லி முடித்த பின்பு, நான் கேட்கத் திட்டமிட்டிருந்த கேள்விகள் எதனையும் கேட்க முடியவில்லை. நேரடியாக என் சார்ந்த அரசியல் பற்றி அவர் விமர்சித்தாலும், அதற்கு எதிராக பதில் சொல்ல எனக்கு நாவும் எழவில்லை, அதற்கு மனமும் விடவில்லை.

**முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?**

படிப்பகம்

போராட்டம்



41–32 கெந்தஹேன வத்தை, தெபானம, பன்னிப்பிட்டிய
தொலைபேசி / தொலைநகல் : 094 113185692
mpssrilanka@gmail.com, http// www.peoplesstruggle.com

## முதலாளித்துவ ஜனநாயகத்தை தோற்கடித்து உழைக்கும் மக்களின் ஜனநாயகத்தை நிறுவுவோம்

# மைத்திரியின் நூறும், மக்களும்.

இரணில் – மைத்ரி அரசின் நூறுநாட்கள் வேலைத்திட்டமும் , அரசியல் தேன்நிலவும் முடிவுக்கு வந்து இரு வாரங்களுக்கு மேலாகும் நிலையில், மீண்டும் போராட்டம் உங்கள் கைகளில். தனது அரசின் 100 நாட்கள் முடிவுக்கு வந்த சித்திரை 23 அன்று, மைத்ரி நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். அவ்வுரையில், பதவிக்கு வந்த பின் எதுவும் செய்யவில்லை என எதிர்கட்சிகளும், அரசுக்கு எதிரானவர்களும் விமர்சிக்கின்றனர். விமர்சிப்பவர்களுக்கு அப்படிதான் தெரியும். ஆனால், தனது தலைமையினான அரசு செய்த பலவிடையங்கள் மக்களாலோ அல்லது விமர்சகர்களளாலோ விளங்கிக் கொள்ள முடியாத அளவுக்குச் சிக்கலானவை. கண்ணுக்குத் தெரியாதவை அல்லது பகிரங்கமாகப் பேசப்படாதவை. தேசத்தின் எதிர்காலத்துக்கு முக்கியமானவை. உதாரணமாக, முன்பு ஆட்சியில் இருந்தவர்களின் தவறான போக்கினால் சர்வதேசமே இலங்கையை ஒதுக்கி வைத்தது. அதைத் தனது அரசு முறிடியடித்து, ஜெனிவா மனித உரிமை ஆணையத்தின் தீர்ப்புகளில் இருந்து இலங்கை காத்துள்ளது. மேலும், இலங்கை மக்களுக்கு மறுபடியும் சுதந்திரமான வாழ்வை உறுதிப்படுத்தியுள்ளது, – ஊழல் ஆட்சியை இல்லாதொழித்துள்ளது தனது அரசு எனக் கூறினார். மைத்ரி மாய்ந்து மாய்ந்து தனது அரசு , தனது அரசு எனக் கூக்குரலிட்டாலும் உண்மை அதுவல்ல. இன்றைய அரசு ஐக்கிய தேசியக்கட்சி ஆதிக்கம் செலுத்தும் அரசு, அந்த வகையில் இரணில் – மைத்ரி அரசு என்றே அழைக்கப்படல் வேண்டும்.

இது ஒரு புறமிருக்க, முன்பு ஆட்சியிலிருந்த மஹிந்த, மேற்கு நாடுகளினதும் அவற்றின் ஆதிக்கங்களுக்கும் பெரிய அளவில் இடம் கொடுக்காமல் அரசியல் செய்தார். நாட்டைச் சீனாவுக்கும் , இந்தியாவுக்கும் கொஞ்சம் கொஞ்சமாகக் கூறு போட்டு மலிவுவிலையில் விற்பனை செய்தார். வந்த இலாபத்தைத் தன் குடும்பத்துடனும் நண்பர்களுடனும் பகிர்த்து கொண்டார். உள் நாட்டில் ஆள்கடத்தல், மனிதஉரிமைகள் மீறல், அரசநிறுவனங்களைச் சூறையாடுவது, இலங்கை அரசின் பொருளாதார வளங்களை தனது குடும்ப சொத்தாகப் பாவிப்பது, வடக்குக் கிழக்கில் மற்றும் நாட்டின் எல்லாப் பகுதியிலும் இராணுவத்தை உபயோகித்து இனவாத ஒடுக்குமுறையை நடைமுறைப்படுத்துவது, சுத்தமான குடிநீருக்காக போராடியவர்களை கொலை செய்வது, மீன்பிடி மானியம் கேட்பவர்களை சுட்டுத்தள்ளுவது என, சர்வாதிகார நெப்போலியன் போனபர்ட் ஆக நடந்து கொண்டார். இவை அனைத்தும் மறுக்கமுடியாதவை. இரணில்–மைத்ரி தலைமையிலான அரசு இவ் ஒடுக்குமுறைகளுக்கு தீர்வு காண்பதாகக் கூறியே ஆட்சிக்கு வந்தது. மஹிந்த அரசின் மிகவும் கேவலமான விளைவுகளை – அதிகாரத்தை இல்லலாதொழிப்தர்காகவே தனது 100 நாள் வேலைத் திட்டம் என அறிவித்தது. ஆனால் உண்மையில் நடந்ததென்ன? இலங்கையினைக் கூறுபோட்டு விற்கும் நவதாராளப் பொருளாதாரச் சந்தையில் இப்போ சீனா, இந்தியாவுடன் மேற்கு நாடுகளும் பங்கு கொள்ள வளிவகுத்துள்ளது இரணில் –மைத்ரி அரசு. மேற்கு நாடுகளுக்குச் சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்ததன் நன்றிக் கடனாகவே, ஜெனிவா மனித உரிமை ஆணையத்தின் தீர்ப்புகளில் இருந்து இலங்கையைத் தற்காலிகமாக் "காத்துள்ளது" மேற்குலகம். இலங்கையில் சுகாதாரமருத்துவசேவை, மருந்து விற்பனை மற்றும் உள்நாட்டுச் சந்தையில் எதுவெல்லாம் மேற்கு மற்றும் ஏகாதிபத்திய நாடுகளால் விற்கமுடியுமோ, அவற்றிற்கெல்லாம் வளி திறந்து விட்டுள்ளது அல்லது மேற்கு சார்ந்த சந்தைக்கான சட்ட மூலங்களை உருவாக்க வகை செய்துள்ளது இரணில் –மைத்ரி அரசு.

100 நாட்களில் மக்களுக்கு செய்வதாக் கூறிய பல சிறு சிறு நன்மைகளைக் கூட, செய்வோம் என அறிவித்து விட்டு, மறு புறத்தில் "இருந்ததையும் கெடுத்தானாம் கொள்ளிக் கண்ணன்" என்பது போல பல சமூக நலத் திட்டங்களை அல்லாட வைத்துள்ளது இரணில்– மைத்ரி அரசு. ஆட்சிக்கு வந்த சில வாரங்களில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட பொருட்களுக்கான விலை குறைப்பைக் சரியான வகையில் நடைமுறைப் படுத்தப்படவில்லை. அதே வரவு செலவுத் திட்டத்தில், 6 சதவீதம் கல்விக்கு ஒதுக்குவதாகவும், மகாபொல புலமைப் பரிசிலுக்கு வழங்கப்படும் தொகையை அதிகரிப்பதாகவும் கூறிய வாக்குறுதிகளைக் கூட நடைமுறைப்படுத்தவில்லை இரணில்–மைத்ரி அரசு. ஊழல் செய்தவர்களை தண்டிப்போம் எனக் கூக்குரலிட்டாலும் பெரிய அளவில் ஒன்றும் நடக்கவில்லை. மிகப் பெரும் ஊழற் பெருச்சாளியான பசில் ரஜாபக்ஷ கைது செய்யப்பட்டாலும், சில மணிநேரங்களே அவர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார். பின்பு தேசிய வைத்தியசாலையின் குளிர் ஊட்டப்பட்ட தனிஅறையுடன் கூடிய சொகுசுப் பகுதிக்குப் மாற்றப்பட்டர்.






இந்தப் பத்திரிகை உங்கள் கைகளில் கிடைக்கும் வேளை, அவர் தனது கொழும்பு வாசஸ்தலத்துக்கு அல்லது அமெரிக்காவுக்கு திரும்பியிருப்பார். அதேபோலவே, அவரின் தம்பியும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளருமான கோத்தபாயாவை விசாரணைக்கு வருமாறு லஞ்ச ஒழிப்பு இலாக்கா அழைத்த நிகழ்வும். இலஞ்ச ஒழிப்பு இலாகாவுக்கு போன கோத்தாபாய, தாரய் தப்பட்டை மற்றும் கண்டியக் கடைசி அரசன் இராசசிங்கன் கொடிகள் சகிதம் மஹிந்த குடும்பத்தின் அடிவருடிகளால் வரவேற்கப்பட்டார். இலஞ்ச ஒழிப்பு இலாகாவின் அலுவலகத்தின் உள்ளே போன கோத்தபாய, தனக்கு "எல்லாம்" மறந்து விட்டது, இன்னும் சில வாரங்கள் அல்லது மாதங்கள் தேவை என்று கூறிவிட்டு, வந்த வேகத்திலேயே வெளியேறி விட்டார்.

இவ்வாறு 100 நாட்களில் இரணில்– மைத்ரி அரசு செய்த "சாதனைகளை" அடுக்கிக் கொண்டே போகலாம்.



ஆம், இந்த 100 நாட்களில் ஆதிக்கசக்திகளுக்கும், முன்னாள் கொடுங்கோலர்களுக்கும், ஏகாதிபத்தியங்களுக்கும் நன்மை செய்வதில் இரணில்– மைத்ரி அரசு பல சாதனைகளைச் செய்து தான் உள்ளது. ஆனால், மக்கள் வாழ்வில் எந்த மாற்றமும் நிகழவில்லை. வறுமையும், ஒடுக்குமுறையும், இலஞ்ச ஊழலும், பொருளாதார சீரழிவும் தொடர்கிறது. மக்கள் நலன் சார்ந்து போராடும் சக்திகள் மீது வன்முறை பிரயோகிக்கப்படுகிறது. அடிப்படை மனித உரிமைகள் உரிமைகள் மறுக்கப்படுகிறது. இலங்கை மாணவர்களின் பிறப்புரிமையான உரிமையான இலவசக் கல்வியும், மக்களின் இலவச சுகாதார சேவையும் இல்லாதொழிக்கப்படும் நிலை வந்துள்ளது. தம் மீதான இராணுவ – இனவாத ஒடுக்குமுறை தளர்த்தப்படும் என எதிர்பார்த்த ஒடுக்கப்பட்ட இன மக்களும் கானல் நீரைக் கண்டு ஏமார்ந்த மான்களாக!

மாற்றமில்லை ! இடதுசாரியமே நமக்கான ஒரே பாதை. திரும்புவோம் இடதுபக்கம்!

படிப்பகம்